
பூங்கொடி
பதிப்பகம்



# மகாத்மாவும்
# மதுவிலக்கும்



ம்புச் செல்வர்
**ம.பொ.சி**

# மகாத்மாவும் மதுவிலக்கும்

சிலம்புச் செல்வர்

ம. பொ. சிவஞானம்

பூங்கொடி பதிப்பகம்

22, வி. எஸ். வி. கோயில் தெரு,
மயிலாப்பூர் : : சென்னை-4.

முதற் பதிப்பு : 26-6-79
உரிமை : ஆசிரியருக்கு

சிலம்புச் செல்வர் ம. பொ. சி
அவர்களின் 74-ம் ஆண்டு
பிறந்த நாள் வெளியீடு-1

விலை ரூ. 3-00

குரு அச்சகம், சென்னை-5.

# பதிப்புரை

காந்திய நெறிமுறைகளோடு தன் வாழ்க்கைப் பாதையை முழுமையாக இணைத்துக் கொண்டு தூயவாழ்வு வாழ்ந்து வருபவர் சிலம்புச் செல்வர் ஐயா ம. பொ. சி. அவர்கள்.

தமிழகத்தில் காந்திய நெறிகளை தன் எழுத்திலும் பேச்சி லும் பரப்புகின்ற காந்தியச் செல்வரான ஐயா அவர்கள் மது ஒழிப்புப் போரில் தீவிரவாதியாக இருந்து வருகிறார்கள்.

தேசியவாதியான ஐயா அவர்கள் காண விரும்புவது மது ஒழிந்த தமிழகத்தை மட்டுமல்ல; மது ஒழிந்த பாரதத்தையுந் தான்.

அந்த நாள் விரைவில் வரவேண்டும் என்ற ஆவலோடு "மகாத்மாவும் மதுவிலக்கும்" என்ற இந்த நூலை சிலம்புச் செலவர் ஐயா அவர்களின் 74-ம் ஆண்டு பிறந்த நாளில் வெளியிடுவதில் பெருமை கொள்கிறோம்.

இந்த நூலை வெளியிடும் நல்வாய்ப்பினை எங்களுக்கு அன்புடன் வழங்கிய ஐயா அவர்களுக்கு எங்கள் நன்றியை உரிமையாக்குகிறோம்.

**வே. சுப்பையா**
பூங்கொடி பதிப்பகம்.

# பொருளடக்கம்


1. தமிழ் மகனே, இதையும் படி ! ... 5
2. தமிழ் இலக்கியங்களிலே மதுவிலக்குப் பிரசாரம் ... 8
3. மகாத்மாவும் மதுவிலக்கும் ... 13
4. மதுவிலக்கு பற்றி மகாத்மா தரும் விளக்கம் ... 19
5. காங்கிரசும் மதுவிலக்கும் ... 28
6. மதுவிலக்கும் தி.மு.க.வும் ... 43
7. மதுவிலக்குப் பிரசாரம் தேவையே! ... 49
8. முடிவுரை ... 64

# தமிழ் மகனே, இதையும் படி!

குடிப்பழக்கத்தை விடவும் கொடுமையானது மனித சமுதாயத்தில் இன்னென்று இருக்க முடியாது. இந்தக் கொடுமையிலிருந்து மனித சமுதாயத்தை விடுவிப்பதற்கு ஆயிரம் ஆயிரமாண்டுகளாகச் சான்றேர் பலர் முயற்சி மேற்கொண்டு வந்துள்ளனர். அறிவை அழிக்கும் — ஒழுக்கத்தைக் கெடுக்கும் — இந்தக் குடிப்பழக்கமானது மனிதனைப் பிடித்த காலத்தை இதுவரை யாரும் கணக்கிட்டுச் சொன்னதாகத் தெரியவில்லை. எனது கைக்குக் கிடைத்த தமிழ் இலக்கியங்களிளெல்லாம் இந்தக் கொடிய பழக்கத்தைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. அதுபோல, இதன் கொடுமையை எடுத்துச் சொல்லி, இதிலிருந்து விடுபடுமாறு மனித சமுதாயத்தை வேண்டுகின்ற கருத்துக்களும் இலக்கியந்தோறும் இருந்துவரக் காண்கிறேம்.

இந்த நூற்றுண்டிலே மதுவிலக்குப் பிரச்சாரத்திற்கென்று ஏராளமான நூல்கள் தமிழ் உள்ளிட்ட இந்திய மொழிகளிலும் ஆங்கிலத்திலும் வெளிவந்துள்ளன. இந்த புனிதப் பணியிலே யானும் பங்குகொள்ள விரும்பி, இந்த நூலை வெளியிட்டிருக்கிறேன். ஆம்; எனது 74-வது பிறந்த நாளிலே தமிழ் அன்னைக்கு யான் அளிக்கும் காணிக்கை இது!

இதுவரை 100 நூல்கள் எழுதியிருக்கிறேன். சமயம், சரித்திரம், அரசியல், மொழி எனப் பல்வேறு பொருள்களைப் பற்றி எழுதியிருக்கிறேன். ஆனல், மதுவிலக்குப் பிரசாரத்திற்காக யான் வெளியிடும் முதல் நூல் இதுதான். இந்த நூலை வெளியிடும்படி காலம் எனக்குக் கட்டளையிட்டது! இது என்து நூருவது நூல்!

நான் பொதுவாழ்க்கையில் ஈடுபட்ட நாளிலிருந்தே மது விலக்குப் பிரசாரத்திலும் ஈடுபட்டு வந்திருக்கிறேன். கள்ளுக் கடைகளை மறியல் செய்திருக்கிறேன். அதனால், எண்ணற்ற இன்னல்களை ஏற்றிருக்கிறேன். என் குடும்ப நலனையும், எனது சுயசாதி நலனையும் பலி கொடுத்திருக்கிறேன். அதற்காக, நான் கொஞ்சங்கூட வருந்தியதில்லை. ஓர் உயர்ந்த குறிக் கோளுக்காக இந்த இன்னல்களையெல்லாம் ஏற்றுக்கொண் டதை எண்ணுந்தோறும் மகிழ்ச்சியடைகிறேன. ஆனால், குடிப் பழக்கம் இந்த நாட்டிலிருந்து இன்னமும் ஒழிக்கப்படா தது கண்டு என் மனம் வேதனைப்படுகிறது.

இரண்டாண்டுகளாக, தமிழக அரசு தமிழினத்தின் வாழ் விலிருந்து குடிப் பழக்கத்தை ஒழித்துக்கட்டுவதென கங்கணம் கட்டிக் கொண்டு பாடுபட்டு வருகிறது. அ. இ. அ. தி. மு க. அரசின் முதல்வர் மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்கள் எல்லை யற்ற துணிவுடன் மதுவை ஒழிக்கும் பணியை மேற்கொண் டிருக்கிறார். அதற்காக, அவசரச் சட்டம் ஒன்றையும் பிறப் பித்து, பின்னர், சட்டமன்றத்தின் ஆதரவோடு அதைச் சட்ட மாக்கியிருக்கிறார். குடிப்பழக்கத்தை ஒழிப்பது அவருக்கும் எளிதாக இல்லை என்பதைக் கண்டு வருகிறேன். ஆயினும், மாண்புமிகு எம். ஜி. ஆர். மிகுந்த உறுதியுடன் மதுவரக்க னுடன் போராடி வருகிறார். இத்துறையில் அவர் எடுத்து வரும் முயற்சிகள் வெற்றி பெறும் பொருட்டு, இந்த நூலை எழுதி வெளியிட்டிருக்கிறேன், அவரது தொண்டுக்குத் துணையாக!

பிரசாரம் தேவைப்படுகிறது! ஆம்; புயல் வேகத்திலே! இந்த உண்மையை உணர்ந்து மதுவிலக்கின் அவசியத்தை மக் களுக்கு உணர்த்த வேண்டி அண்மைக் காலமாக மேடைகளில் பேசி வருகிறேன். தமிழரசுக் கழகத்தின் ஏடான 'செங்கோல்' வார இதழிலே அரசின் மதுவிலக்கு முயற்சிகளுக்கு ஆதர வளித்து அவ்வப்போது கட்டுரை எழுதி வருகிறேன. ஒருவகை

யில் அந்தப் பேச்சுக்களின்-எழுத்துக்களின் தொகுப்பாகத் தான் இந்த நூல் வெளி வருகிறது.

தமிழரசு இயக்கத் தோழர்கள் இந்த நூலை மக்களிடையில் பரப்புவதற்குப் பெருமுயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். இதனை, கழகத்தின் கொள்கை வழிப்பட்ட பணியாக அவர்கள் கருத வேண்டும்.

இதுவரை யான் எழுதிய நூல்களை வாங்கிப் படித்து, எனது கொள்கைகளுக்கு வெற்றி தேடித் தந்த தமிழ் மக்கள் இதையும் வாங்கிப் படிப்பார்களாக!

"தமிழ் மகனே, இதையும் வாங்கிப் படி!" என்பதுதான் ஒவ்வொரு தமிழருக்கும் யான் விடுக்கும் வேண்டுகோள். குடிப்பழக்கம் ஒழிந்தால், தமிழ்க் குடி உயரும்! "தமிழா, குடிக்காதே!" என்று ஒவ்வொரு தமிழ் மகனும் குரல் கொடுக்க வேண்டும்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் பேசிய பேச்சுக்களின்—எழுதிய கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவருவதால், கூறியது கூறல் இருக்கக்கூடும். பொருளின் தொடர்பு கருதி அதனை விட்டு வைத்திருக்கிறேன். வாசகர்கள் அதனை ஒரு குறையாகக் கருதமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

இந்நூலை குறைந்த அவகாசத்தில் சிறந்த முறையில் பதிப்பித்து வெளியிட்ட பூங்கொடிப் பதிப்பகத்தாரைப் பாராட்டுகிறேன்.

தமது வாழ்நாள் முழுவதும் பூரண மதுவிலக்குக்காகப் பாடுபட்ட மூதறிஞர் ராஜாஜிக்கு இந்நூலை காணிக்கையாக்குவதிலே பெருமகிழ்ச்சியடைகிறேன்.

சென்னை
26-6-79

ம. பொ. சிவஞானம்

# தமிழ் இலக்கியங்களிலே மதுவிலக்குப் பிரசாரம்

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் மதுப்பழக்கத்தைத் தடுக்க சாத்திரம் பிறந்துவிட்டது; 'சாத்திரம்' என்று சொன்னேனு, அது சரியல்ல ; 'வேதம்! பிறந்துவிட்டது என்று சொல்ல வேண்டும். ஆம்; தமழருக்கு வேதம் திருக்குறள் தானே!

அந்த வேதம் கூறுகிறது, 'குடிப்பது குற்றம்' என்று 'குடிப்பது மன்னிக்க முடியாத குற்றம்' என்றும் கூறுகின்றது. எதையும் மன்னிப்பவள் தாய். அந்தத் தாய்கூட, 'குடிக்கும்' மகனை மன்னிக்க மாட்டாள்' என்கிறது வள்ளுவர் வகுத்த சட்டம்! "ஈன்றாள் முகத்தேயும் இன்னது" —அதாவது, 'குற்றங்களை மன்னிக்கும் தாயும் மன்னிக்க முடியாதது மதுப் பழக்கம்" என்கிறார்.

குடிக்கவும் அனுமதிக்கிறது, வள்ளுவர் சட்டம். ஆம். ஒரு நிபந்தனையோடு! அதாவது, "சான்றோரால் தான் மதிக்கப்பட வேண்டும் என்று விரும்பாதவன் எவனோ, அவன் குடித்துத் தொலையட்டும்" என்கிறது திருக்குள். "உண்ணற்க கள்ளை" என்று சொன்ன வள்ளுவர், திரும்பவும், "உண்ணுக" என்றும் சொலகிறார். குடிப்பவனைச் சானறோர்கள் பாராட்ட மாடடார்களாம! ஏன், பழிக்கவும் செய்வார்களாம். அதனுல் சொல்கிறார், "குடியடா மகனே, குடி! சான்றோரால் பாராட்டப்படுவதை விரும்பாவிடில், குடித்துத் தொலை!" என்கிறார். குறளாசிரியர். 'எவனொருவன் குடிப்பழககத்தை மேற்கொளளுகிறானே, அவன், செத்தாருள் வைக்கப்படுவான்!'

என்கிறார். 'என்று குடிக்கத் தொடங்குகிறானோ, அன்றே அவன் செத்தான்' என்கிறார்.

இந்தக் கொடிய பழக்கத்தை நாட்டிலிருந்தே ஒழிப்பது அரசின் கடமை என்பதை உணர்த்த விரும்பி, "கள்ளுண்ணாமை" என்ற அதிகாரத்தைப் பொருட்பாலில் வைத்தார் வள்ளுவர். அதனால், அதனை 'சட்டம்' என்கிறேன். ஆம்; மது ஒழிப்புச் சட்டம் தமிழர் வேதமான திருக்குறள். வடமொழியிலே வேதத்தின் வழி வந்தது, ஆகமம். வேதத்தை விடவும் ஆகமத்திற்கே அதிக மதிப்புண்டு அந்தணரிடையிலே! அதுபோல, மதுவிலக்கு பற்றிய வேதம் திருக்குறள் என்றால், அதையொட்டி வந்த ஆகமம் சிலப்பதிகாரம்!

சிலம்பிலே, கள் விற்பதும் குடிப்பதும் கூறப்படுகின்றன நிகழ்ச்சிப் போக்கில்! நாகரிகமற்ற எயினர்கள் குடித்துவிட்டுக் கூத்தாடுவதும் காட்சிப்படுத்தப்படுகிறது, வேட்டுவவரியிலே! ஆனால், அதே சிலப்பதிகாரத்தின் இறுதியிலே, கவிக் கூற்றாக,

**"கள்ளும் களவும் காமமும் பொய்யும்**
**வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின் !"**

(சிலம்பு. 30: 197-98)

என்று கூறுகிறார், இளங்கோவடிகள்.

"மல்லன் மா ஞாலத்து வாழ்வீர்!" என்று குரல் கொடுத்து உலகோர் அனைவரையும் கூவி அழைத்து, கள்ளுண்ணல் உள்ளிட்ட பஞ்சமா பாதகங்களை ஒழிக்குமாறு வேண்டுகின்றார். ஐந்து பாதங்களிலே கள்ளுக்கே அவர் முதன்மை தந்திருக்கிறார்.

வேதத்தை அடுத்தது ஆகமம் என்றால், அதனை அடுத்தது சாத்திரம் என்பர் சமய வாதிகள். அதுபோல, திருக்குறள் வேதத்தையும் சிலப்பதிகார ஆகமத்தையும் அடுத்து கம்ப ராமாயண சாத்திரமும் குடிப்பழக்கத்தை எதிர்க்கிறது.

ஒரு வகையில் திருவள்ளுவர், இளங்கோ ஆகியோரிடமிருந்து கம்பர் வேறுபடுகின்றார். கம்பர், மது இல்லாத பாரத நாட்டையே காட்டுகின்றார். ஆம்; குடிப்பழக்கம் நாட்டில் இருப்பதை ஒப்புக்கொண்டு, அதன் கேடுகளை விளக்கி, அதனை விடுமாறு வேண்டுகிறார் வள்ளுவர். குடி விற்போரையும் குடிப்போரையும் காட்டிவிட்டு பின்னர், குடிப்பழக்கத்தை ஒழிக்குமாறு இளங்கோ கூறுகின்றார். கம்பரோ, குடிப்பழக்கமே இல்லாத பாரத நாட்டைக் காட்டுகின்றார், தமது இராமாயணத்திலே!

வான்மீகியிலே வரும் இராமன் குடிப்பழக்க முடையவன். ஆனால், கம்ப ராமாயணத்தில் அவன் குடிப்பழக்கத்தை விட்டு விடுகிறான். தமிழ்நாடு, தமிழர் நாகரிகம் குடிப்பழக்கத்திற்கு எதிரானவை என்பது கம்பரது நம்பிக்கை. அதனால், குடிப்பழக்கமுடைய வான்மீகி, ராமனை, குடியொழித்த கோமகனாகக் காட்டுகின்றார். தெய்வமே மானிடனாக வந்தாலும், அவன் குடிப்பழக்க முடையவனானால், தமிழ் நாட்டில் நடமாட முடியாது என்று கம்பர் சொல்லாமல் சொல்லுகிறார்!

இராவண வதம் முடிந்து, சீதை மீட்கப்பட்டு, அவள் ராமன் எதிரே வந்து நிற்கும்போது, அவளை ஏற்க மறுக்கிறான் ராமன். அதற்கு அவன் சொல்லும் காரணங்களுள் ஒன்று, அவள் இலங்கையில் இருந்த காலத்திலே குடிக்கப் பழகியிருப்பாள் என்பதாகும். 'இலங்கையில் நீ மது அருந்தியதோடன்றி, அதனை எங்களுக்கும் விருந்து வைக்க வந்தனையோ?' என்கிறான் இராமன்.

கம்பர், தமது காப்பியம் முழுவதிலும் அரக்கரிடமும் குரக்கரிடமுமன்றி, மற்றுள்ள மானிடரிடம் மதுப் பழக்கத்தைக் காட்டவில்லை. குரக்கர் நாகரிக மற்றவராதலால் கிஷ்கிந்தையிலே அவர்களிடம் குடிப்பழக்கம் இருந்ததைக் காட்டுகிறார். ஏன், குரக்கர் குலத்தவனும் கிஷ்கிந்தைத்

மன்னனுமான சுக்ரீவனை குடித்துவிட்டு நினைவிழந்து புரள்வதைக் காட்சிப்படுத்துகிறார்.

அதுபோல, கொடிய குணங்கள் எத்தனை யுண்டோ, அத்தனையையும் கடைப்பிடிக்கும் அரக்கர்களிடமும் குடிப் பழக்கமுண்டு என்பதனை, இலங்கை வேந்தன் தம்பியான கும்பகருணனைக் கொண்டே காட்டுகிறார். மற்றபடி, அயோத்தி, மிதிலை ஆகிய நகரங்களிலே—குறிப்பாக, மானிடர்களிடையிலே குடிப்பழக்கத்தைக் கம்பர் காட்டவில்லை.

பால காண்டத்தில்—உண்டாட்டுப் படலத்தில், மிதிலை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் தயரதன் கூட்டத்தாரிடை குடிப்பழக்கத்தைக் காண்கின்றோம். "இந்தப் படலம் ராமாயணக் கதைக்குத் தேவையற்றது" என்கிறார் மகரிஷி வ வே.சு. ஐயர். ஆம்; கம்பர் பாடியிருக்க மாட்டார் என்னும் பொருள் தோன்ற! "இந்தப் படலம் கம்பர் பாடியதல்ல; இடைச் செருகல்" என்கிறார், ரசிகமணி டி. கே. சி.

உண்மையில், இந்த ஒரு படலத்தில் தவிர நாகரிக மனிதர்கள் குடிப் பழக்கத்தைக் கொண்டிருந்ததற்கு கம்ப ராமாயணத்தில் வேறெங்கும் சான்றில்லாததால், உண்டாட்டுப் படலம் இடைச் செருகல் என்றே சொல்லிவிடலாம்.

கம்பர், தாம் காண விரும்பிய குடிப்பழக்கமற்ற நல்ல நாட்டைத் தமது ராமாயணத்திலே கற்பித்துக் காட்டுகிறார். ஆம்; கொடுப்பாரும் கொள்வாருமில்லாத நாட்டைக் காட்டுகிறார். அதுபோல, குடிப்பாரும் குடி விற்பாரு மில்லாத கோசல நாட்டையும் காட்டுகிறார்.

கம்பருக்குப் பின் தோன்றிய புராணங்களிலேயும், சிற்றிலக்கியங்களிலேயும் குடிப்பழக்கத்தின் கொடுமை எடுத்துக்காட்டப்பட்டு, அதனை அடியோடு கைவிட வேண்டிய தன் அவசியம் வலியுறுத்தப்படுகிறது. குடிப் பழக்கத்தை

குற்றமற்றது என்று கூறும் கவிதையோ, காப்பியமோ, சிற்றி லக்கியமோ தமிழில் இல்லையென்று சொல்லிவிடலாம். திருக்குறளில் தொடங்கி, இதற்குப் பின் வந்த நீதிநூல்களில் எல்லாம் 'கள்ளுண்ணாமை' வலியுறுத்தப்படுகிறது.

பொதுவாக, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்கள் தொடங்கி எஞ்சியுள்ள பெருங்காப்பியங்கள் மூன்றிலும், பின்னர்த் தோன்றிய சிறுகாப்பியங்களிலும் குடிப் பழக்கம் கண்டிக்கப்படுகிறது. குடிப்பழக்கத்தைக் கைவிடக் கோரும் தனிப்பாடல்களும் ஏராளம்.

இந்த நூற்றாண்டில் நம்மோடு வாழ்ந்து மறைந்த தேசியக் கவியான பாரதியாரும் குடியை வெறுத்துப் பாடியுள்ளார்.

'ஆரமு துண்ணுதற்கு
ஆசை கொண்டார் கள்ளில்
அறிவைச் செலுத்து வாரோ ?'

என்றும்,

''சிந்தையில் கள் விரும்பி
சிவ சிவ என்பதுபோல்''

என்றும் பாரதியார் பாடியுள்ள வரிகளிலே, கட்குடியின் அவருக்கு இருந்த வெறுப்பு வெளிப்படுகிறது.

சுருங்கச் சொன்னால், திருவள்ளுவர் தொடங்கி பாரதியார் வரையுள்ள 2000 ஆண்டுகளாக தமிழ் இலக்கிய உலகில் மது விலக்குப் பிரசாரம் நடந்து வந்திருக்கிறது. அவற்றையெல்லாம் தொகுத்துக் கூறுவதானால், அது ஒரு தனிப் பெரும் நூலாக அமையுமாதலால், சுருங்கக் கூறினேன்.

['செங்கோல்', 3-6-79]

# மகாத்மாவும் மதுவிலக்கும்

காந்தியடிகள், மதுவிலக்கை புனிதமான ஒரு கொள்கையாகக் கொண்டிருந்தார். அன்னியர் ஆதிக்கத்தை அவர் எந்த அளவுக்கு வெறுத்தாரோ, அதே அளவில், அறிவையும் ஒழுக்கத்தையும் அழிக்கும் குடிப் பழக்கத்தையும் வெறுத்தார். அதனுற்ருன், அன்னிய ஆதிக்கத்தை எதிர்க்கும் விடுதலைப் போர்த் திட்டத்திலே, குடிப்பழக்கத்தை ஒழிக்கும் மறியலையும் ஒன்ருகச் சேர்த்தார். ஒரு நாட்டின் விடுதலைப் போரிலே, குடிப் பழக்கத்தை ஒழிப்பதும் போராட்ட முறைகளிலே ஒன்ருக அமைந்தது இந்திய விடுதலைப் போராட்டத்தில் தான்.

இதற்கு ஒரு விசேஷ காரணமுண்டு. அதாவது, ஆங்கிலேயர் இந்தியாவை ஆளத் தொடங்குவதற்கு முன்பு இந் நாட்டில் மதுபானக் கடைகள் மூலம் அரசு வருவாய் பெற வில்லை. பிரிட்டிஷார் ஆளத் தொடங்கிய பின்னரே, கள்ளு, சாராயக் கடைகள் அரசாங்கத்தாரால் குத்தகைக்கு விடப் பட்டன. அதன்மூலம் ஆண்டுதோறும் பல கோடி ரூபாய் களை ஏழை எளியோரிடமிருந்து பறித்தது பறங்கியர் ஆட்சி. அரசாங்கத் தலையீடின்றிக் கள் வாணிபம் நடந்த காலத்திலே, குடிப்போரின் தொகையும், ஒருவர் குடிக்கின்ற மதுவின் அளவும் குறைவாகவே இருந்திருக்க வேண்டும். அரசாங்கம் மது வாணிபத்தில் தலையிட்டு, ஆண்டுதோறும் கள்ளு—சாராயக் கடைகளை ஏலத்தில்விட்டு, அதனை, திட்டமிட்ட ஒரு வாணிப மாக அமைத்த பின்னர், குடிப்பழக்கம் பெருகியது! ஆம்; அன்னிய ஆட்சியும் லாபத்திலேயே குறியுடைய நம்மவர் களான மது வணிகர்களும் கூட்டுச் சேர்ந்து ஏழை எளியவர் களைத் திட்டமிட்டுச் சுரண்டினர். இதனுற்ருன், பிரிட்டிஷ்

ஆட்சிக்கு எதிரான விடுதலைப் போராட்டத்திலே, கள்ளு, சாராயக்கடை மூலம் அரசாங்கம் பெறும் வருவாயைத் தடுப்பதும் ஒரு அம்சமாக அமைந்தது. பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்னர் குடிப்பது சாத்திர விரோதமாக, சமூக பகிஷ்காரத்திற்குரிய குற்றமாகக் கருதப்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சியிலோ, குடிப்பது சட்ட சம்மத மாக்கப்பட்டது. எவ்வளவு தலைகீழ் மாற்றம்!

காங்கிரஸ் மகாசபை, இந்தியாவில் முதன் முதலில் தோன்றிய மாபெரும் அரசியல் கட்சியாகும். லோகமான்ய திலகர் காங்கிரசுக்கு வழிகாட்டியாக இருந்த காலத்திலேயே, அவரால் மதுவிலக்குக் கொள்கை வலியுறுத்தப் பெற்று, விடுதலைப் பாசறை வீரர்களிடையே அதற்கு மதிப்பிருந்து வந்தது. ஆனால், திலகருக்குப் பின்னர் காங்கிரசுக்கு வழி காட்டும் பொறுப்பை ஏற்ற காந்தியடிகளால்தான் குடிப்பழக்க முடையோர் காங்கிரசிலே அங்கத்தினராகச் சேர முடியாதபடி காங்கிரஸ் அமைப்புச் சட்டத்திலே விதி வகுக்கப்பட்டது. காந்தியடிகளின் பதினறு அம்சங்கள் கொண்ட நிர்மாணத் திட்டத்திலே பூரண மதுவிலக்கும் ஒரு அம்சமாக்கப் பெற்றது. காங்கிரசில் சேருவதற்காக, குடிப் பழக்கத்தை விட்டு நல்வழிப்பட்டவர்கள் பல்லாயிரவராவர்.

மதுவிலக்குக் கொள்கைக்கு வெற்றி தேடுவதற்காக, அந்நாளிலே காந்தியத்தில் நம்பிக்கை கொண்ட காங்கிரஸ்காரர்கள் தியாகங்கள் புரிந்தனர். சொந்தத்திலே தென்னை மரங்கள்—தென்னந் தோப்புகள் வைத்துக் கொண்டு, அவற்றைக் கள்ளிறக்குவதற்கு விட்டு, அதனல் மாதந்தோறும் ஆயிரக் கணக்கில் வருவாய் அடைந்தவர்கள், காங்கிரசில் சேர்ந்த பின்னர், மனமுவந்து அந்த வருவாயை இழக்க நேரிட்டது. அப்படியே, வாணிபம் செய்து பொருளீட்டி வந்த தேச

பக்தர்கள், கள்ளு—சாராய வாணிபத்தைக் கனவிலும் நினைக்க முடியாதவர்களா யிருந்தனர்.

விடுதலைப் போராட்ட காலத்திலே காந்தியடிகளின்—காங்கிரசின் மதுவிலக்குக் கொள்கை வெறும் பிரச்சாரத்தோடு நின்று விடவில்லை. சட்டத்தை மீறி கள்ளுக்கடைகள் முன்பு மறியல் நடத்தி, போலீசாரின் தடியடி, துப்பாக்கிச் சூடு, அபராதம், சிறைத்தண்டனை ஆகிய இன்னல்களை யெல்லாம் அனுபவித்தனர்! அந்நாளைய காங்கிரஸ்காரர்கள்.

கள்ளுக்கடைச் சொந்தக்காரர்கள் குண்டர்களைக் கூலிக்கமர்த்தி மறியல் செய்யும் தொண்டர்களைத் தாக்கிய நிகழ்ச்சிகள் பலவாகும். சென்னை நகரிலே ஒரு கள்ளுக்கடைச் சொந்தக்காரர் தாமே துப்பாக்கியைக் கையிலேந்தித் தொண்டர்களைச் சுட முயன்றார்.

காந்தியடிகள், நாச வேலையைக் கனவிலும் நினையாதவர். அசேதனப் பொருள்களையே யன்றி, சேதனப் பொருள்களையும் சிதைக்க விரும்பாத சன்மார்க்கி தேசத்தின் விடுதலைக்காகக்கூட நாச வேலையை விரும்பாதவர். அப்படிப்பட்டவர், கொடிய கோடரியைத் தம் கையில் தாங்கி, கள் இறக்கப் பயன்படுத்தப் பெற்ற ஈச்சமரங்களை வெட்டி வீழ்த்தினார்.' 'ஈச்சமர ஒழிப்புச் சத்தியாக்கிரகம்'' என்பதாக ஒன்றைத் தொடங்கி, அதனை நடத்துவதில் தாமே முன் நின்றார். இந்த நிகழ்ச்சி மதுவிலக்கில் காந்தியடிகளுக் கிருந்த உறுதியைக் காட்டுவதாகும்.

1931 ஆம் ஆண்டிலே, பிரிட்டிஷ் ஆட்சிக்கும் காங்கிரஸ் மகாசபைக்கு மிடையே ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அது, 'காந்தி—இர்வின் உடன்படிக்கை' எனப் பெயர் பெற்றது. அந்த உடன்படிக்கைப்படி, சட்டத்தை மீறும் போராட்டத்தை அல்லது மறியல் முறையைக் கைவிட காங்கிரஸ்

இசைந்தது. அப்போது, கள்ளு—சாராயக்கடை மறியலையும் காங்கிரஸ் கைவிட வேண்டுமா?—என்ற பிரச்னை எழுந்தது. வைசிராய் லார்டு இர்வின், "சட்ட சம்மதத்துடன் நடை பெறும் கள்ளு - சாராயக் கடைகள் முன்பு மறியல் செய்து, அத்துறையில் வாணிபம் நடத்துவோரை நஷ்டப்படுத்துவ தானது, சட்ட விரோதமான செயல்தான். அதனை அனு மதிக்க முடியாது" என்று வழக்காடினார். அடிகளார், "எந்தக் காரணத்தைக் கொண்டும் மது வாணிபத்தை சட்ட சம்மதமானதாக நான் ஒப்புக்கொள்ள முடியாது" என்றார்.

இந்தக் கருத்து வேற்றுமை காரணமாக, காந்தி—இர்வின் ஒப்பந்தப்பேச்சு கடைசி நேரத்தில் முறிந்துவிடும் நிலைமை ஏற் பட்டது. இறுதியில், வைசிராய்தான் விட்டுக் கொடுத்தார். அதன்படி, விடுதலைப் போராட்டம் நிறுத்தப் பட்டுள்ள நேரத் திலும் ஐந்து பேருக்கு அதிகப்படாத காங்கிரஸ் தொண்டர் கள் அமைதியான முறையில் கள்ளு—சாராயக் கடைகள் முன்பு மறியல் செய்யலாம் என்ற கருத்து காந்தி—இர்வின் உடன்படிக்கையில் சேர்க்கப்பட்டது.

காந்தி—இர்வின் ஒப்பந்தம் நடைமுறையிலிருந்த காலம் வரை கள்ளுக்கடை மறியல் தொடர்ந்து நடைபெற்றது. இதில், கவனிக்கத் தக்க ஒரு அம்சம் என்னவென்றால், மது வாணிபம் சட்ட சம்மதமாக்கப்படுவதை தற்காலிகமாகக் கூட ஒப்புக்கொள்ள காந்தியடிகள் மறுத்ததாகும். குடிப் பழக்கத்தை விடவும், அந்தப் பழக்கத்தை ஊக்குவித்து, அதன் மூலம் அரசாங்கம் பெரும் பொருள் ஈட்டுவதையே மிகவும் கொடுமையானதாகக் காந்தியடிகள் கருதினார்.

விடுதலைப் போராட்டத்தின் நடுவிலே—அதாவது, 1936 முதல் 1939 வரை—இடைக்கால ஓய்வாக போராட்டத்தைச் சற்று நிறுத்தியது காங்கிரஸ். அப்போது, பரீட்சார்த்தமாக —1937-ஆம் ஆண்டில் - இந்திய அரசாங்கச் சட்டப்படி, ஆறு

மாநிலங்களில் காங்கிரஸ் அமைச்சரவைகள் நிறுவப்பெற்றன. அப்போது தமிழகத்தில் தான் முதன் முதலாக பரிபூரண மது விலக்குச் சட்டம் உருவாக்கப் பெற்றது. அந்தச் சட்டப்படி, சேலம் மாவட்டத்தில் 1937 அக்டோபர் 2ஆம் நாளன்று மது விலக்கு நடைமுறைக்கு வந்தது. அதற்கடுத்த ஆண்டு வட ஆற்காடு மாவட்டத்திலே மதுவிலக்கு தொடர்ந்தது. 1939ல் காங்கிரஸ் அமைச்சரவைகள் பதவி துறந்தன. அதனை யடுத்து, தனிநபர் சத்தியாக்கிரகமும் ஆகஸ்டுப் புரட்சியும் நடைபெற்றன.

காங்கிரஸ் அமைச்சரவை பதவி துறந்த பின்னர் ஆலோசகர் ஆட்சி' என்னும் பெயரால், ஆங்கிலேயர்களின் ஏகபோக ஆட்சி நடைபெற்றபோது மதுவிலக்கு விஸ்தரிக்கப் படவில்லை. ஆயினும், காங்கிரஸ் ஆட்சியின்போது மதுவிலக்கு நடைமுறைக்கு வந்த மாவட்டங்களிலே அது ரத்து செய்யப் படவில்லை. ரத்து செய்யும் பாவத்தைச் செய்ய பிரிட்டிஷ் ஆட்சிக்குக் கூடத் துணிவில்லை.

இந்தியாவிலிருந்து வெளியேற பிரிட்டிஷார் தேதி நிர்ண யித்தபோது, பண்டித நேருவின் தலைமையிலே மத்தியில் இடைக்கால (காங்கிரஸ்) அரசு அமைந்த நாளிலே, பிரதமர் நேருவும், மத்திய அமைச்சர்களான சர்தார் படேல், ராஜன் பாபு, ராஜாஜி ஆகியோரும் காந்தியடிகளின ஆசியைப் பெற புது டில்லியில அவரது முகாமிற்குச் சென்றனர். அடிகளுக்கு அன்று மௌன விரத நாள். அதனால், அவர் வாய் திறந்து இடைக்கால அமைச்சரவைக்கு வாழ்த்துக் கூறவில்லை—கூற வும் முடியாது. ஒரு துண்டுக் காகிதத்தில் எழுதிக் கொடுத் தார். அதுவும் வாழ்த்தல்ல—கட்டளைகள்! அவை யாவை? (1) பூரண மது விலக்கை நடைமுறைக்குக் கொண்டு வாருங் கள்; (2) உப்பு வரியை அடியோடு ஒழியுங்கள்; (3) தீண் டாமையை முற்றிலும் அகற்றுங்கள். இவற்றை நிறைவேற்று வதன் மூலம் என் ஆசியைப் பெறுங்கள்—என்பனவாம்.

காந்தியடிகளின் இந்தக் கட்டளைகளிலே பூரண மது விலக்கு இருப்பதை நினைவில் கொள்ள வேண்டும். நினைவில் கொண்டுதான், இந்திய அரசியல் சட்டத்தின் 'அடிப்படைக் கொள்கைகள்' பகுதியிலே, பரிபூரண மதுவிலக்கைக் கொண்டு வருவதும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டது.

1948 ஆம் ஆண்டில்—இந்தியா பரிபூரண விடுதலைபெற்ற பின்னர்—தமிழ்நாடு முழுவதிலும் பூரண மதுவிலக்கு நடைமுறைக்கு வந்தது.

['செங்கோல்', 5-10-69]

# மதுவிலக்கு பற்றி மகாத்மா தரும் விளக்கம்

மகாத்மா காந்தி அடிகள் தென்னாப்பிரிக்காவில் இருந்த போதே மதுவிலக்கு இயக்கத்தைத் தொடங்கி விட்டார். இதனை அவரே கூறக் கேட்போம்:

"தென்னாப்பிரிக்காவிற்கு ஒப்பந்தத் தொழிலாளிகளாக இந்தியாவி லிருந்து சென்றவர்களில் பெரும்பாலோர் அங்கே குடிப்பழக்கத்தைக் கொண்டுவிட்டனர்.

"இந்தக் கெட்ட பழக்கத்திற்கு பெண்கள்கூட அடிமைக ளாகி விட்டார்கள். அவர்களை மிகவும் பரிதாபகரமான நிலை யில் நான் பார்த்திருக்கிறேன். மதுக் கடைகளுக்கருகில் அந்த பரிதாபக் காட்சிகளைக் கண்ட யாரும் குடிப்பழக்கத்தை ஆதரிக் கவே மாட்டார்கள்."

(காந்தி நூல் தொகுப்பு—4. பக். 37)

தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த இந்தியர்களிலே மிகப் பெரும்பாலோர் தமிழர்கள் என்பதனை நினைவில்கொண்டால், அடிகள் குடிப்பழக்கத்தை எதிர்த்து முதன்முதலில் இயக்கம் கண்டது தமிழ்த் தொழிலாளர்கள் மத்தியில்தான் என்பது புலனாகும். இதனால், காந்தியடிகளுக்கு நன்றி செலுத்தும் பொருட்டும் குடிப்பழக்கத்தை அடியோடு ஒழித்திட தமிழர் கடமைப்பட்டிருக்கின்றனர்.

அடிகள் தென்னாப்பிரிக்காவி லிருந்து இந்தியா திரும்பிய பின்பு இங்கும் மதுவிலக்கு இயக்கத்தைத் தொடங்க வேண்டிய

அவசியம் தமக்கு எப்படி ஏற்பட்டது என்பதனையும் விளக்குகின்றார், கேட்போம்:

"தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு வந்த பின்னர் குடியின் கேடுகள் சம்பந்தமாக, எனக்கு அங்கு ஏற்பட்டது போன்ற வேதனை மிக்க அனுபவமே இங்கும் ஏற்பட்டது.

"அநேக சுதேச சமஸ்தான மன்னர்கள் மதுபானங்களால் பாழாகிறார்கள் ; பணக்கார வாலிபர்கள் நிலையும் இது தான். குடியினால் தொழிலாளர்கள் அடைந்துள்ள நிலையும் மிகவும் பரிதாபகரமானதாகும்.

"இப்படிப்பட்ட கசப்பான அனுபவங்களால் நான் மது பானங்களுக்குப் பரம எதிரியாக இருப்பது யாருக்கும் வியப்பை உண்டு பண்ணாது."

(காந்தி நூல் தொகுப்பு— 4. பக். 38)

குடிப் பழக்கத்தின் கேடுகள் பற்றிக் காந்தியடிகள் தெள்ளத் தெளிய உணர்ந்திருந்தார். அவற்றை எடுத்து விளக்குவதிலேயும் அவர் தனித்திறமை பெற்றிருந்தார். இதோ, அடிகள் பேசுகிறார் :

"குடியானது ஒருவருடைய உடம்பையும், ஒழுக்கத்தையும், அறிவையும், ஆக்கத்தையும் நாசமாக்குகின்றது."

(காந்தி நூல் தொகுப்பு-4. பக். 38)

"குடியினால் ஏற்படும் பொருள் இழப்பைவிட ஒழுக்கக் கேடே இன்னும் முக்கியமானதாகும்.

"குடிகாரன் தன் மனைவி, தாய், சகோதரி ஆகியவர்களுக்கிடையேயுள்ள வேற்றுமைகளையே மறந்துவிட்டு, குடிப்

போதை இல்லாத சமயங்களில் தான் செய்வதற்கு வெட்கப் படும் குற்றங்களைச் செய்துவிடுகிறான்.

"தொழிலாளர்கள் 'குடி' என்னும் சாத்தானின் ஆதிக்கத் திற்குட்பட்டிருக்கும்போது அவர்கள் எவ்வளவு கேவலமான நிலைக்குப் போய்விடுகிறார்கள் என்பதைத் தொழிலாளர் களுடன் தொடர்புள்ளவர்கள் நன்கு அறிவார்கள்."

(காந்தி நூல் தொகுப்பு-4 ; பக். 258)

"தீண்டாமைக்கு அடுத்தபடியான தீமை ஒன்று உண்டென்றால், அது 'குடி' என்ற சாபக்கேடுதான்."

(காந்தி நூல் தொகுப்பு-7 ; பக். 673)

அடிகள் சிறிதுகூட காலதாமதமின்றி உடனடியாக பூரண மதுவிலக்கை அமல் நடத்தியாக வேண்டுமென்று பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே வற்புறுத்தி வந்தார். அதனை அவரே சொல்லக் கேட்போம் :

"ஒருமணி நேரத்திற்கு இந்தியாவின் சர்வாதிகாரியாக என்னை நியமித்தால், முதல் காரியமாக நான் என்ன செய்வேன் தெரியுமா? நஷ்ட ஈடு கொடுக்காமலே எல்லா மதுபானக் கடைகளையும் மூடிவிடுவேன்.

" பூரண மதுவிலக்கு அவசியம் என்பதை ஒப்புக்கொண்டு விட்டால் உடனடியாக அதனை அமுலுக்குக் கொண்டுவருவது சாத்தியமே."

(காந்தி நூல் தொகுப்பு-7 ; பக். 670)

சட்டத்தின் மூலமாக அல்லாமல் மிதக்குடி பிரசாரத்தின் மூலம் குடிப்பழக்கத்தால் ஏற்படும் கொடுமைகளி லிருந்து மக்களை மீட்டுவிட முடியும் என்று காந்தியடிகள் காலத்திலும்

சிலர் சொல்லிக் கொண்டிருந்தனர். அதற்கு அடிகள் தந்த மறுப்பு வருமாறு :

"குறிப்பிட்ட ஓரளவுக்குள் கட்டுப்படுத்திக் கொண்டு மதுபானம் செய்யலாமென்றும், அதனுல் பயன் உண்டென்றும் கருதுகிறவர்கள் உண்டு. அவர்களுடைய கூற்றில் நியாய மிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. வாதத்திற்காக அவர் களுடைய கூற்றை நாம் ஏற்றுக் கொண்டாலும்கூட, குடிப் பழக்கமுடைய எண்ணற்ற மனிதர்களை ஒரு கட்டுப்பாட்டிற் குள் நிறுத்த முடியாது என்ற உண்மையை அவர்கள் மறுக்க இயலாது. இந்த உண்மையைக் கருதியேனும் மதுபானங்களை அடியோடு தடை செய்ய வேண்டியது நமது கடமையாகிறது"

(காந்தி நூல் தொகுப்பு— 4 : பக். 35)

பூரண மதுவிலக்கு என்பதற்குக் காந்தியடிகள் தந்த விளக்கம் வருமாறு :

"பூரண மதுவிலக்கு என்பதன் பொருள் என்ன ? அதன் அளவு என்ன ? பூரண மதுவிலக்கு என்பது, போதை தரும் பானங்களின், பொருள்களின விற்பனையை அடியோடு தடை செய்வதாகும்.

"ஆயினும், இதற்கென்று அரசாங்கத்தால் அனுமதிக்கப் பட்ட டாக்டர்கள் போதைப் பொருள்களை மருந்தாக எழுதிக் கொடுத்தால் அதை வாங்கலாம். அப்போதும் அதற்காக அரசாங்கத்தால் நடத்தப்படும் கடைகளில்தான் அதனை வாங்க முடியும் என்ற நிலையும் இருக்க வேண்டும்."

காந்தியடிகள், "பெர்மிட்" முறையில் மதுவை வாங்குவ தற்கு அனுமதித்ததும் அந்நாளில் இந்தியாவிலிருந்த ஐரோப்பியர் விஷயத்தில்தான் என்பதனை இங்கு நினைப்பூட்டி யாக வேண்டும். ஐரோப்பியருக்கு மட்டும் 'பெர்மிட்' வழங்க

அனுமதித்து காந்தியடிகள் எழுதியது "அரிசன்" 31-7-1937 இதழிலாகும்.

இதோ, "பெர்மிட்" முறைபற்றி அடிகள் மேலும் கூறுகிறார்: "குடிக்காமல் இருக்க முடியாத, இருக்க விரும்பாத ஐரோப்பியர்களின் விருப்பத்திற்காக குறிப்பிட்ட அளவு மதுவை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யலாம். இவை களும் முழு புட்டிகளில் — அனுமதிச்சீட்டு பெற்றிருப்பவர் களுக்கே-விற்கப்பட வேண்டும். ஓட்டல்களில் போதை தரும் மதுவகைகளை விற்பது தடை செய்யப்பட வேண்டும்."

(காந்தி நூல் தொகுப்பு— 7: பக். 682)

அமெரிக்காவில் மதுவிலக்குச் சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு, அங்கு அது படுதோல்வியடைந்ததனைச் சிலர் மதுவை சட்ட மூலம் தடை செய்வதற்கு எதிராக எடுத்துக்காட்டி வாதிடுகின்றனர். இந்த வாதம் காந்தியடிகள் காலத்திலும் எழுப்பப்பட்டது. அதற்கு அவர் தந்துள்ள பதில் வருமாறு :

"இந்தியா அமெரிக்கா அல்ல. அமெரிக்க உதாரணம் நமக்கு இடையூறே யொழிய, அனுகூலமானது அல்ல. அமெரிக்காவில் குடிப்பதற்கு வெட்கப்பட வேண்டியதில்லை. குடிப்பது அங்கே ஒரு நாகரிகச் செயல். மதுவிலக்குக் கொஞ்ச காலமே அங்கு சாத்தியமாக விருந்தது,

"அந்தப் பரீட்சையை ஒரு தோல்வி என்று நான் நினைக்க வில்லை. இன்னும் அதிக உற்சாகத்துடனும், அதை சமாளிப்ப தில் நல்ல அனுபவத்துடனும் அமெரிக்கா மதுவிலக்குக் கொள்கைக்குத் திரும்பி வராது என்று நான் நம்பிக்கையை இழந்துவிடவில்லை. இந்தியாவில் பூரண மதுவிலக்கை அமல் நடத்தினல், அமெரிக்காவிலும் அது ஏற்படுவது துரிதப் படுவதாய் இருக்கலாம்.

"இந்தியாவைப்போல் உலகத்தில் வேறு எந்தப் பாகத்திலும் மதுவிலக்கை நிறைவேற்றுவது அவ்வளவு சுலபமல்ல. ஏனெனில், இங்கே ஒரு சிறு தொகையினர்தான் குடிக்கின்றனர். குடிப்பது ஒரு அவமரியாதையான காரியம் என்று இங்கு கருதப்படுகிறது. குடி என்றால் என்னவென்றே தெரியாதவர்கள் கோடிக்கணக்கில் இருக்கிறார்கள் என்றே நம்புகிறேன்."

(காந்தி நூல் தொகுப்பு-7 : பக். 680-682)

"ஐரோப்பாவில் என்னைப் பார்க்க ஒருவர் வரும்போது அவருக்கு நான் மதுபானம் கொடுக்கவில்லையென்றால், அது எனக்கு கௌரவக் குறைவு. "இந்தியாவில் அப்படிப்பட்ட நிலைமை இல்லை".

(காந்திநூல் தொகுப்பு-4 : பக். 265)

சிலர், மதுப்பழக்கத்தின் கொடுமையை எடுத்துக் கூறி, அந்தப் பிரசாரம் மக்களுடைய உள்ளத்தில் போதிய அளவு பதிந்த பின்னர் மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டு வரலாம் என்று காந்தியடிகளிடம் கூறினர். அவர்களுக்கு அடிகள் தந்த பதில் வருமாறு :

"மதுவிலக்குச் சட்டம் செய்வதற்கு முன்னர் குடியின் தீமையைப்பற்றி விளக்கும் போதனை ரீதியான பிரசாரம் அவசியம் என்பது தவறான கருத்து என்று நான் கூறுகிறேன். போதனை தீமையைப் போக்கிவிடாது.

"இந்தியா சம்பந்தப்பட்டவரையில் போதிக்கும் பிரசாரத்திற்கு முந்தியதாக இல்லாது போனாலும், சட்டமும் பிரசாரமும் சேர்ந்தே செய்யப்பட வேண்டும் என்பது எனது கருத்து."

(காந்தி நூல் தொகுப்பு—4 : பக். 65)

மதுவிலக்குச் சட்டத்திற்கு முன்பு மதுவின் கேடுகள் பற்றிப் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்பதனை அடிகள் ஏற்க மறுத்ததற்குக் காரணம், அது விஷயத்தில் தென்னுப்பிரிக்காவில் அவர் பெற்ற கசப்பான அனுபவம்தான். அதனை அவரே கூறக் கேட்போம் :

"மதுவிலக்கு சம்பந்தமான என் வேலை 1893ல் நான் தென்னுப்பிரிக்காவுக்குச் சென்றபோதே ஆரம்பமாகிவிட்டது. என்னுடைய சொந்த மக்கள், என் சொந்த நாட்டினர் அங்கு குடிப்பதையும், அதன் காரணமாக அவர்கள் சாக்கடை வாழ்க்கை நடத்தி வருவதையும் நான் கண்டபோது, எனக்குள்ள வேலை மிகமிகக் கஷ்டமானது என்பதை அறிந்தேன்.

"இந்த ஆண்களும் பெண்களும் குடிப்பழக்கத்திற்கெதிரான சொற்பொழிவுகளைக் கேட்கவோ, அவர்களுக்குச் சொல்லப்படும் புத்திமதிகளை ஏற்றுக்கொள்ளவோ தயாராக இல்லை. எந்தவிதமான அதிகாரமும் இல்லாத ஒரு தனி நபரால் என்ன என்னவெல்லாம் செய்ய முடியுமோ, அப்படிப்பட்ட முறைகளையெல்லாம் நான் அனுசரித்துப் பார்த்தேன். ஆனல், அம்முயற்சிகளினல் எல்லாம் வெற்றி எதுவும் ஏற்பட்டதாக சொல்லிக் கொள்வதற்கில்லை."

(காந்தி நூல் தொகுப்பு—4. பக். 263)

பூரண மதுவிலக்குக் கொள்கையை காந்தியடிகள் வற்புறுத்தியதன் காரணமாக இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை 1920ல் முன்னிலும் தீவிரமாக அதனைத் தனது கொள்கையாக ஒரு தீர்மானத்தின் மூலம் ஏற்றுக் கொண்டது. அதன்பின் மதுவை ஒழிக்கும் நடவடிக்கைகளில் நாடு முழுவதிலும் புயல் வேகத்தில் காங்கிரஸ்காரர்கள் ஈடுபட்டனர். அதுபற்றி அடிகளார் தரும் தகவல் வருமாறு :

"1920-21ல் புயல் வேகத்தில் குடி ஒழிப்புப் பிரசாரம் நடந்தது. சில மாகாணங்களிலாவது முழு வெற்றியடைந்து

விடும் நிலையில் நாங்கள் இருந்தோம் என்பதனை அரசாங்க அறிக்கையிலிருந்து அறிந்து கொண்டோம். மதுபானக் கடைகள் அனேகமாக மூடப்பட்டு விட்டன. அசாமில் அபின் கடைகளுக்குப் போவார் இல்லை.

"பீகார், அசாம், மத்திய மாகாணம் ஆகிய இடங்களில் அரசாங்க வருமானம் அதிகம் குறைந்துவிட்டது. சுய தூய்மையடைய வேண்டுமென்ற உணர்ச்சியும் ஆர்வமும் வேட்கையும் அதிகமாக ஏற்பட்டன. அரசியல் இயக்கம் சுய தூய்மை இயக்கமாக மாறியது. அந்த வேகத்தில் ஆயிரக் கணக்கான ஊழியர்கள் மதுக்கடைகளையும், அபின் கடைகளையும் மறியல் செய்யலானார்கள். மதுபானக் கடைகளுக்குப் போகாமலிருந்து விட வேண்டியது தங்களுடைய கடமை என்று மக்கள் நம்ப வைத்தனர்.

"அரசாங்கம் அடக்குமுறையில் இறங்கியது. மதுபானக் கடைகளையும் அபின் கடைகளையும் மறியல் செய்தார்கள் என்ற குற்றத்திற்காக ஆயிரக் கணக்கான தொண்டர்களை அரசு சிறையில் அடைத்தது."

அடிகள் தரும் இந்தத் தகவலினால் இந்தியாவில் பிரிட்டிஷ் அதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவதை விடவும், மதுபோதையிலிருந்து நாடு விடுதலை பெறுவது அவசர முக்கியத்துவம் வாய்ந்ததாக மக்கள் அந்நாளில் கருதினார்கள் என்பது புலனாகிறது.

இந்த உண்மையை இந்நாளைய தேசியவாதிகள் நினைவில் கொள்வார்களானால், நாடு விடுதலை பெற்று 32 ஆண்டுகளாகியும் இன்னம் பூரண மதுவிலக்கு இந்தியாவில் அமுல் நடத்தப் படாமல் இருப்பதற்காக வெட்கப்படுவார்கள் வேதனைப் படுவார்கள்.

மதுவிலக்குக் கொள்கைக்கு வெற்றி தேடுவதற்காக சர்க்காரையும் சட்டமன்றத்தையும் பயன்படுத்திக்கொள்ளும்

முயற்சியில் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே காங்கிரஸ்காரர்கள் ஈடுபட்டதுண்டு. அதனை, காந்தியடிகளும் வரவேற்றார். அவர் சட்டமன்றப் பிரவேசத்தையோ, சர்க்காரில் பதவி வகிக்கும் முயற்சியையோ அந்நாளில் ஆதரிக்கவில்லை அந்த வகையில் பூரண ஒத்துழையாமைக் கொள்கையையே அடிகள் கொண்டிருந்தார். இருந்தும், மதுவிலக்குக்கு வெற்றிதேட சர்க்காரையும் சட்டமன்றத்தையும் பயன்படுத்தும் நடவடிக்கைகளுக்கு அவர் ஆதரவளித்தார். இதோ, சான்று :

"சென்னை சுயராஜ்யக் கட்சியினர் பூரண மதுவிலக்கையும் தங்கள் வேலைத் திட்டததில் சேர்த்துக் கொண்டிருக்கின்றனர். அதற்காக அக்கட்சியினர் பாராட்டுக்குரியவராகின்றனர்.

"......இதற்காக அவர்களுடைய சட்டசபைப் பிரவேசத்தைக் கூட நான் மன்னித்து விடுவேன்"

உத்தமர் காந்தியடிகள் முதன்முதலாக மதுவிலக்குப் பிரசாரத்திலும், அதையொட்டிய போராட்டத்திலும் ஈடுபட்டது தென்னாப்பிரிக்காவில் குடியேறிய தமிழர் மத்தியில் தான் என்பதை அறிந்தோம். அடிகளாரின் மனச்சாட்சிக் காவலராக விளங்கிய ராஜாஜி அவர்கள் 1937ல் தமிழகம் உள்ளிட்ட சென்னை மாகாண முதல்வராக வந்தபோது, அப்போது இந்தியாவில் ஆறு மாகாணங்களில் காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதென்றாலும், சென்னை மாகாணத்தில்தான் முதன்முதலாக மதுவிலக்குச் சட்டம் அமுலுக்கு வந்தது. அதன்பின் இன்றும் காந்தியடிகள் பிறந்த குஜராத்திலும், மதுவிலக்குப் பிரசாரத்தை முதன்முதலாக இலககிய ஏட்டிலும் தொடங்கிய தமிழகத்திலும்தான் பூரண மதுவிலக்கு நடைமுறையில் இருந்து வருகிறது. இதனை நினைத்து நினைத்துத் தமிழர் பூரிப்படைய வேண்டும்

பூரண மதுவிலக்குச் சட்டத்திற்கு வெற்றிதேட கள்ளச் சாராய ஒழிப்பிலும் அரசுக்குக் கைகொடுக்க தமிழர் முன்வர வேண்டும்.

# காங்கிரசும் மதுவிலக்கும்

இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையானது தான் தோன்றிய காலந்தொட்டே—அதாவது, காந்தியடிகளின் சீரிய தலைமையைப் பெறுவதற்கு முன்பே மதுவிலக்கைத் தனது கொள்கையாகக் கொண்டிருந்தது. காங்கிரசின் வற்புறுத்தல் காரணமாக, 1889ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் "இந்தியாவில் குடிப்பழக்கம் அதிகரித்து வருவதால், அதைத் தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்" என்ற தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. அடுத்த ஆண்டிலேயே இந்திய அரசு, குடிப்பழக்கத்தைக் குறைக்க ஆரம்ப நடவடிக்கைகள் சிலவற்றை மேற்கொண்டது. இது, காங்கிரஸ் மகாசபைக்குத் திருப்தியளித்தது.

திரும்பவும் இந்தப் பிரச்சினையை—அதாவது, சட்டத்தின் மூலம் குடிப்பழக்கத்தைக் குறைக்க வேண்டுமென்பதனை 1900ஆம் ஆண்டில் கூடிய காங்கிரஸ் மகாசபையில் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மருந்துக்காக அல்லாமல் வேறு வகையில் இறக்குமதி செய்யப்படும் அன்னிய சாராயத்தின்மீது அதிக வரி விதிக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. காங்கிரஸ் மகாசபை லோகமான்ய பாலகங்காதர திலகரை வழிகாட்டியாகக் கொண்டிருந்தபோதும், அவரது தூண்டுதல் காரணமாக, குடிப்பழக்கத்தை ஒழிப்பதில் தீவிரங் காட்டி வந்தது.

1906-ல் கல்கத்தாவில் தாதாபாய் நௌரோஜி அவர்கள் தலைமையில் கூடிய காங்கிரஸ் மகாச்பையிலே அன்னியப் பொருள்களைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்ற தீர்மானம் நிறை

வேற்றப்பட்டது. அத்தீர்மானத்திலே, பகிஷ்காரத்திற்குரிய பொருள்களோடு மதுபான வகைகளும் சேர்க்கப்பட்டன.

இந்தியாவில் இன்றுள்ள அரசியல் கட்சிகளிலே பூரண மது விலக்கைத் தனது கொள்கையாக முதன்முதலில் ஏற்றுக் கொண்ட கட்சி ஒன்று உண்டென்றால், அது காங்கிரஸ் கட்சி தான். இன்றளவும் அந்தக் கொள்கையிலே அது உறுதியாக நிற்கிறது. ஆனால், காங்கிரஸ் கட்சியின் பெயரால் ஆட்சிப் பொறுப்பிலுள்ளவர்கள், பூரண மதுவிலக்கை அமுல்படுத்துவ திலே தயக்கம் காட்டுகிறார்கள். சில மாநிலங்களிலே அரை குறையாக அமல் நடத்தப்படுகிறது. இன்னும் சில மாநிலங் களிலே அதுகூட இல்லை. காங்கிரஸ் முதல்வர்களிலே சிலர், மதுவிலக்குக் கொள்கையை ஆட்சேபிக்கவும் துணிவு பெற்று விட்டனர். காரணம், காங்கிரஸ் மேலிடம் இதில் கண்டிப் பாக இல்லாததுதான்!

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே—அப்போதைய பெரிய சென்னை மாகாணம் உள்ளிட்ட ஆறு மாநிலங்களில் இந்திய தேசிய காங்கிரஸ் இடைக்கால முயற்சியாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோதே—உடனடியாக பூரண மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டு வருமாறு காந்தியடிகள் காங்கிரஸ் முதல்வர்களுக்குக் கட்டளையிட்டார்.

குடிப்பழக்கத்தை சட்டத்தின் மூலம் ஒழிப்பதால் மாநில அரசுகளுக்கு வருவாய் இழப்புப் பிரச்சினை ஏற்பட்டது. அந்தக் காலத்தில் மதுவின் மூலம் அரசுக்குக் கிடைக்கின்ற வருமானத்தின் மூலம் மக்களுக்குக் கல்வியளிக்கப்பட்டு வந் தது ஆகவே, "வருவாயை அரசு இழந்து விடுமானால், மக்கள் கல்வி வசதியை இழந்துவிடுவார்கள்" என்ற சங்கட மான நிலை ஏற்பட்டது.

இதுபற்றி அடிகள் தெரிவித்த கருத்து வருமாறு :

"இந்த அதருமமான வழியில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு நமது குழந்தைகளுக்குக் கல்வி கற்பிப்பது நமக்குப் பெருமையளிக்கும் விஷயம் அல்ல. கல்விக்குப் போதிய பணம் கிடைக்காமல் போய்விடுவதாக இருந்தாலும், துணிவாக காங்கிரஸ்காரர்கள் இந்த வருமானத்தை ஒதுக்கித் தள்ளிவிட வேண்டும்.

"இந்த வருமானக் குறைவுக்குச் சமமான அளவில் ராணுவச் செலவைக் குறைக்க வேண்டும் என்று அவர்கள் மத்திய அரசை வற்புறுத்தினுல், பிரமாதமான கெடுதல் எதுவும் நேர்ந்துவிடாது."

(காந்தி நூல் தொகுப்பு–7 : பக். 665)

"ஒரு மணி நேரத்திற்கு இந்தியாவில் என்னைச் சர்வாதிகாரியாக நியமித்தால், முதல் காரியமாக நான் எல்லா மதுபானக் கடைகளையும் மூடிவிடுவேன்.

"இதனுல் அரசு இழக்கும் வருமானத்தை ஈடு செய்வதற்காக ராணுவச் செலவை உடனடியாகக் குறைத்துவிடுவேன். புதிய நிலைமைக்கு ஏற்றவாறு சேனுதிபதி எப்படியாவது சரிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பேன்."

(காந்தி நூல் தொகுப்பு-7 ; பக். 670)

1937ல் ஆறு மாநிலங்களில் காங்கிரஸ் அமைச்சரவைகள் ஏற்பட்டபோது, "மூன்ருண்டுகளில் மதுபானக் கடைகள் அனைத்தும் மூடப்பட்டாக வேண்டும்" என்று காந்தியடிகள் உறுதி தோய்ந்த குரலில் உத்தரவிட்டார். இதோ, அந்த உத்தரவு :

"பூரணமாக மதுவிலக்கைக் கொண்டுவர வேண்டுமென்ருல், உடனடியாக அதை எப்படிக் கொண்டுவர முடியும் ?

"1937 ஜுலை 14ஆம் தேதி காங்கிரஸ் மந்திரி சபை ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. 'உடனடியாக' என்று நான் சொல்வது, ஆட்சிப் பொறுப்பை ஏற்றதிலிருந்து மூன்றுண்டுகளில் பூரண மதுவிலக்கு அமல் நடத்தப்படும்" என்று அறிவிப்பதாகும். இரண்டு ஆண்டுகளிலேயே அதை அமுலாக்குவது சாத்தியம் என்று நான் கருதுகிறேன். ஆனால் நிர்வாக சங்கடங்கள் பற்றி எனக்குத் தெரியாதாகையால் மூன்று ஆண்டுகள் என்கிறேன்.

"இதனால் ஏற்படும் வருமான இழப்பை நான் ஒரு பொருட்டாகக் கருதவில்லை. முதல் தரமான தேசிய முக்கியத் துவம் வாய்ந்த ஓர் விஷயத்தில் வருவாய் இழப்பைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தால், பூரண மதுவிலக்கு என்பது எட்டாத ஒரு கனியாகவே இருக்கும்".

(காந்தி நூல் தொகுப்பு–7 ; பக். 679)

காந்தியடிகள், உலகினர் கண்முன்னே இந்தியாவின் தேசிய அந்தஸ்தை பெருமளவுக்கு உயர்த்திக் காட்டக்கூடியது ஒன்று உண்டென்றால், அது பரிபூரண மதுவிலக்கை உடனடியாக அமுல் நடத்துவதன் மூலம் இந்திய சமுதாயத்தில் ஏற்படக்கூடிய மகத்தான மாறுதல்தான் என்று கருதினர். இதனை, அவரே சொல்லக் கேட்போம் :

"உடனடியாகப் பலன் கிடைக்கிறது என்பதால்தான் மதுவிலக்குக்கு முதலிடம் அளிக்கிறேன். இதற்காக, காங்கிரஸ்காரர்கள்—ஆண்களும் பெண்களும்—ரத்தத்தைச் சிந்தியிருக்கிறார்கள். இதைத் தவிர வேறு எந்த ஒரு மாறுதலாலும் இந்திய சமுதாயத்தின் தேசிய அந்தஸ்து அவ்வளவாக உயராது."

(காந்தி நூல் தொகுப்பு—7 : பக். 680

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலே ஆறு மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது மற்ற மாநிலங்களில் முஸ்லிம்களின் செல்வாக்கில் இருந்த காங்கிரசல்லாத கட்சிகள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தன. அவைபற்றிக் காந்தியடிகள் தெரிவித்த கருத்து வருமாறு :

"காங்கிரசல்லாத ஐந்து மாகாணங்களும் காங்கிரஸ் மாகாணங்களைப் பின்பற்றிப் பூரண மதுவிலக்கை அமல்படுத்துவது சாத்தியமே. இந்தியா குடிகார நாடாக அல்லாமல், குடி ஒழித்த நாடாக இருப்பதிலே காங்கிரசல்லாத முஸ்லிம் முதலமைச்சர்களுக்கும் அக்கறை உண்டு என்று நான் நம்புகிறேன்."

(காந்தி நூல் தொகுப்பு—7 : பக். 680)

முதன் முதலாக இந்தியாவில் ஆறு மாநிலங்களில் மதுவிலக்குச் சட்டம் அமுலுக்கு வந்தபோது, சட்டத்தை மீறி கள்ளச் சாராயம் காய்ச்சுவதும் விற்பதுமான சமூக விரோதச் செயல்கள் தலையெடுத்தன. அதுபற்றிக் காந்தியடிகள் வெளியிட்ட கருத்து வருமாறு :

"திருட்டுத்தனமாக சாராயம் காய்ச்சுவதைத் தடுப்பதற்கு அதிக செலவாகுமே என்பது ஆஷாடபூதித்தனமாகும். 'அல்ல'வென்றால், அது சிந்தனையற்ற வாதமாகும்.

"மற்ற குற்றங்களைத் தடுப்பதற்காகும் செலவுகளைவிட கள்ளச் சாராயம் காய்ச்சுவதைத் தடுப்பதற்கு ஏன் அதிகச் செலவாக வேண்டும்? 'கள்ளச் சாராயம் காய்ச்சுவோர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுக்கப்படும்' என்று அறிவித்துவிட்டு, அந்த விஷயத்தை மறந்துவிட வேண்டும். திருடுவதைப் போலவே கள்ளச் ச்சாராயம் காய்ச்சுவதும் என்றென்றைக்கும் நடந்துகொண்டே இருப்பதாக இருக்கலாம்."

(காந்தி நூல் தொகுப்பு—7 : பக். 684)

காந்தியடிகள் பூரண மதுவிலக்கை அமல் நடத்துவதால் அரசுக்கு ஏற்படக்கூடிய வருவாய் இழப்பை ஈடு செய்வதற்காக புதிய வரி இனங்களைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று காங்கிரஸ் ஆட்சிகளுக்கு ஆலோசனை கூறினார். அது வருமாறு :

"சில மாகாணங்களில் மொத்த வருமானத்தில் மதுத் துறையில் கிடைக்கின்ற வருமானம் மூன்றில் ஒரு பங்கு என்று சொல்லப்படுகிறது. இந்த வருமான இழப்பை எப்படி ஈடு செய்வது ?

"புதிய வருமான இனங்களைக் கண்டுபிடிக்க வேண்டும். மரண வரி, பீடி உட்பட புகையிலை வரி ஆகியவைகளை விதிக்க லாமென்று ஏற்கனவே யோசனைகள் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றை உடனடியாக நிறைவேற்றுவது அசாத்தியமானது என்று கருதப்பட்டால், பற்றுக்குறையைச் சமாளிப்பதற்குக் குறுகிய காலத்திற்கு கடன் வாங்கலாம் அதுவும் தோல்வி யடைந்தால், இராணுவச் செலவைக் குறைத்துக் கொண்டு, மாகாணங்களுக்கு அது அதற்கு ஏற்ற வீதாச்சாரப்படி மது விலக்கு மானியம் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்கலாம்.

"தங்களுடைய உள்நாடு சம்பந்தப்பட்ட மட்டிலாவது இராணுவத்தின் உதவி தேவையில்லையென்று மாகாணங்கள் உறுதியாகக் கூறமுடியுமானல், இந்தக் கோரிக்கையை மறுப்பது மத்திய அரசுக்குக் கஷ்டமாயிருக்கும்."

(காந்தி நூல் தொகுப்பு-7, பக். 689)
('அரிசன்', 28-8-1937)

மதுவிலக்கால் ஏற்படக்கூடிய பொருள் இழப்பை ஈடு செய்வதற்குப் புதிய வரிகளைக் கண்டுபிடிக்கலாம் என்று அடிகள் ஆலோசனை சொல்லியதையொட்டித்தான் மூதறிஞர் ராஜாஜியால் விற்பனை வரி கண்டுபிடிக்கப்பட்டது. பீடி உட்

பட புகையிலை மீதும் ராஜாஜி அரசு வரி விதித்தது. இந்த இரண்டு வரிகளும் கடந்த 43 ஆண்டுகளிலே, பல முனைகளாக வடிவெடுத்து, படிப்படியாக உயர்த்தப்பட்டுக் கொண்டே வந்து, இப்போது கோடி கோடியாக மக்களிடமிருந்து வசூலிக்கப்படுகின்றன. வேதனையென்ன வென்றால், மதுவிலக்கை அமல் நடத்தாமலே, மதுவால் கிடைக்கின்ற கொள்ளை வருமானத்தோடு சேர்த்து அதிகப்படி வருமானமாக விற்பனை வரியையும், புகையிலை வரியையும் வசூலிப்பதாகும்.

காந்தியடிகள், 'மதுவிலக்கு மானியம்' என்னும் பெயரில் மத்திய அரசிடமிருந்து நிதி உதவி கேட்க வேண்டுமென்று பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே மாநிலங்களுக்கு ஆலோசனை கூறினார். ஆனால், அரசு அதனை மறுக்கவில்லை; கொடுக்கவுமில்லை. காரணம், மதுவிலக்கைக் கொள்கையளவில் கூட அது ஏற்காததுதான். ஆனால், மதுவிலக்கைக் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டு அதை அமல் நடத்துமாறு மாநிலங்களை வற்புறுத்தி வரும் நிலையிலும் மதுவிலக்கால் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடு செய்ய மாநிலங்களுக்கு மான்யந்தர மறுக்கிறது இன்றைய மத்திய அரசு.

விடுதலைப் போராட்ட காலத்திலே காந்தியடிகளைச் சுற்றியிருந்த தேசபக்த அறிஞர்களிலே ஒவ்வொருவரும் அடிகளாருக்குப் பிடித்தமான கொள்கைகளிலே ஒவ்வொன்றுக்குத் தங்களை ஆட்படுத்திக் கொண்டனர். இந்தவகையில் அரிசனப் பணிக்குத் தக்கர் பாபாவும், ஆதாரக் கல்விப் பணிக்குத் திரு. ஜாகிர்உசேன் அவர்களும், மதுவிலக்குப் பிரசாரப் பணிக்கு மூதறிஞர் ராஜாஜியும் பொறுப்பேற்றிருந்தனர்.

ராஜாஜியின் செயல்திறனில் காந்தியடிகள் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார்.

காங்கிரஸ் சார்பில் "இந்திய மதுவிலக்குச் சங்கம்" என்பதாக தனி அமைப்பு நிறுவப்பட்டது. அதன் நிர்வாகம் முழு

வதும் ராஜாஜியிடம் ஒப்படைக்கப்பட்டது. சங்கத்தின் சார்பில் "புரொஹிபிஷன்" ("மதுவிலக்கு") என்னும் பெயரில் ஆங்கில மாதப் பத்திரிகையொன்றையும் ராஜாஜி நடத்தலானார். தமிழிலும் "விமோசனம்" என்னும் பெயரில் மாதப் பத்திரிகை நடத்தினார். மதுவிலக்குப் பிரசாரத்தில் ராஜாஜிக்குள்ள திறமைபற்றி காந்திஜி பாராட்டுரை வழங்கினர்.

"குடியின் தீமையைப்பற்றி அச்சில் வரும் எதுவும் திரு. சி. இராசகோபாலாச்சாரியாரின் பருந்துக் கண்களுக்குத் தப்புவதில்லை" என்று அடிகள் கூறியிருக்கிறார்.

இராஜாஜி முதன்முதலாக 1937ல் சென்னை மாகாணத்தில் மதுவிலக்குச் சட்டத்தை அமுல் நடத்தியபோது, மதுவிலக்கால் வேலையிழப்போருக்கு மாற்று வேலை தரும் பிரச்சினை எழுந்தது. அதிலே முதலமைச்சர் ராஜாஜி போதிய அக்கறை காட்டவில்லையென்றும் குறை கூறப்பட்டது. அதுபற்றிக் காந்திஜி கூறியதாவது :

"இந்தச் சீர்திருத்தத்தில் தமக்குள்ள உற்சாகத்தில் திரு. சி. ராஜகோபாலாச்சாரியார் இதனால் வேலையில்லாமல் போய்விடக்கூடிய கள்ளிறக்குவோர் பிரச்சினையைப் பொருட்படுத்தாமல் தள்ளிவிட்டாராம். அவர்கள் விஷயத்தில் என்ன செய்ய வேண்டுமென்று அவர் நினைத்திருக்கிறார் என்று எனக்குத் தெரியாது.

"பனைவெல்லம் செய்வதில் நிபுணராகிக் கொண்டிருக்கும் திரு. கஜானம் ஒன்றைக் கூறுகின்றார். தெற்கு மாகாணத்தில் மரம் ஏறுபவர்கள் இந்த மோசமான கள்ளிறக்கும் தொழிலில் ஈடுபட்டிருப்பதாக அவர் கருதுகிறார். ஆனால், மதுவிலக்கு ஆட்சியில் அவர்கள் இறக்குவது பதனீராக இருக்கும். இது கள் ஆக மாற்றப்படாமல், வெல்லமாக மாற்றப்படும்.

"மரம் ஏறுபவர்களைப்பற்றி எனக்குத் தெரிந்தமட்டில் வரப்போகும் மதுவிலக்கினால் அவர்கள் எதையும் இழக்கப் போவதில்லை. உடலையும் உள்ளத்தையும் பாதிக்கும் ஒரு திரவகத்திற்குப் பதிலாக ஏழைகளுக்குப் பனைவெல்லம் என்ற மலிவான, ஆனால், புஷ்டியான உணவுப் பொருள் கிடைக்கும்."

(காந்தி நூல் தொகுப்பு-7 : பக். 685)
('அரிசன்'—14-8-1937)

1920-21ஆம் ஆண்டிலே காந்தியடிகள் தலைமையில் ஒத்துழையாமை இயக்கம் தோன்றியபோது, அதன் ஓர் அம்சமாக இருந்தது, மது ஒழிப்புப் போராட்டம். ஒரு நாட்டின் விடுதலைப் போராட்டத்திலே பூரண மதுவிலக்கும் வேலைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டது இந்தியாவில்தான். இந்தப் புதுமை அல்லது புரட்சி வேறு எந்த நாட்டின் விடுதலைப் போரிலும் கலந்திருந்ததாக உலக வரலாறு காட்டவில்லை.

இந்தியாவின் கலாசாரத்தோடு கலந்தது மதுவிலக்குக் கொள்கை. குடிப்பழக்கத்தைப் பஞ்சமா பாதகங்களில் ஒன்றாகக் கருதி, அதனை விட்டொழிக்குமாறு போதிக்கிறது இந்து சமயம். இஸ்லாமும் இதிலே கண்டிப்புக் காட்டுகிறது. இதனாற்றான், அன்னிய ஆதிக்கமென்னும் அரக்கனிடமிருந்து நாட்டை விடுவிக்க நடந்த போராட்டத்திலே மதுவரக்கனிடமிருந்து மக்களை விடுவிக்கும் முயற்சியும் கலந்துவிட்டது. இந்திய தேசிய காங்கிரசானது, தன் அமைப்பு விதிகளிலே, குடிப்பழக்கமுடையவர்களை உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ள மறுக்கும் விதியையும் கொண்டிருக்கிறது. இது, 1920ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட விதியென்றாலும், இன்றுவரை காங்கிரஸ் அமைப்பு விதிகளில் ஒன்றாக அது இருந்து வருகிறது.

இன்றுள்ள சூழ்நிலையிலே காங்கிரஸ் கட்சியில்கூட மதுப் பழக்கம் உள்ளவர்கள் உறுப்பினர் ஆகிவிட முடிகிறது. இதிலே காங்கிரஸ் அமைப்பு விதியைக் கண்டிப்பாக அமல் நடத்த நிர்வாகிகள் அக்கரை காட்டுவதில்லைபோலும் !

இன்று தமிழகத்தில் ஆளும் கட்சியாகவுள்ள அ இ அ. தி. மு. க. வானது குடிப்பழக்கம் உள்ளவர்களைத் தன் உறுப்பினர்களாக ஏற்க மறுக்கும் விதிமுறையைக் கொண்ட கட்சியாக இயங்கவில்லை. ஆயினும், மதுவை ஒழிப்பதில் அ. இ. அ. தி. மு. க. அரசு பிறர் தன்னை ஐயப்படாத வகையில் தீவிர ஆர்வம் காட்டி வருகிறது.

தி. மு. க. ஆட்சிக் காலத்திலும் — அண்ணா அவர்கள் முதல்வராக இருந்தபோது — பூரண மதுவிலக்கில் ஐயத்துக்கு இடமற்ற வகையில் ஆர்வம் காட்டப்பட்டது. தாம் பதவி ஏற்ற முதலாண்டிலேயே அகில இந்திய மதுவிலக்கு மாநாட்டைச் சென்னையில் நடத்த அண்ணா ஒத்துழைப்பு தந்தார். ஆசார்ய கிருபளானி, திருமதி. சுசேதா கிருபளானி, டாக்டர் சுசீலா நய்யார் உள்ளிட்ட தேசியத் தலைவர்கள் பலர் அந்த மாநாட்டில் கலந்து கொண்டனர் முதல்வர் அண்ணா அவர்களும் அந்த மாநாட்டில் கலந்துகொண்டு பேசியதோடு, தமது ஆட்சி எந்தவித நிபந்தனையுமின்றி பூரண மதுவிலக்கைத் தீவிரமாக அமுல் நடத்தும் என்று உறுதி கூறினார். அரசியல் கட்சிகளிலே பூரண மதுவிலக்கைக் கொள்கையளவில் ஏற்க மறுக்கும் கட்சி எதுவும் இல்லை. ஆயினும், கம்யூனிஸ்டுக் கட்சிகள் சட்டத்தின் மூலம் கட்டாயப்படுத்தி குடிப்பழக்கத்தை ஒழித்துவிட முடியாதென்று கருதுகின்றன. தங்களுடைய ஆதர்ச நாடாக விளங்கும் சோவியத் யூனியனில் பூரண மதுவிலக்குச் சட்டம் தோல்வியடைந்துவிட்டதனை எடுத்துக் காட்டி, இங்கும் சட்டத்தின் மூலம் குடிப்பழக்கத்தை ஒழித்து விட முடியாதென்று கூறுகின்றன. தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகளெல்லாம் ஒருமனதாகக் குடிப்பழக்கத்தை ஒழிக்கத்

தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டால் அதற்கு நல்ல பலன் கிடைப்பது உறுதி. ஆயினும், சட்டத்தின் மூலமாக அல்லாமல் வெறும் பிரச்சாரத்தினுல் மட்டுமே குடிப்பழக்கத்திலிருந்து மக்களை மீட்டுவிட முடியாது.

"அ. இ. அ தி. மு க. பூரண மதுவிலக்கில் தீவிரம் காட்டுவதால் "குடிப்பழக்கம் உடையவர்கள் தன் கட்சியில் சேர முடியாதவாறு தன் அமைப்பு விதிகளை அது மாற்றியமைக்குமா ?" என்று மதுவிலக்குச் சட்டத் திருத்த மசோதாவின் மீது சட்டமன்ற மேலவையில் விவாதம் நடந்தபோது, எதிர்க்கட்சித் தலைவரால் வினு எழுப்பப்பட்டது

இந்த வினு பொருளுடையதுதான். ஆனுல், இன்றுள்ள சூழ்நிலையிலே ஓர் அரசியல் கட்சிமட்டும் குடிப்பழக்கம் உடையவர்கள் தன் உறுப்பினராவதைத் தடைசெய்யும் வகையில் விதி வகுப்பது சாத்தியம் இல்லை. வகுத்தாலும், அதனை வெற்றிகரமாக அமுல் நடத்த முடியாது. நாட்டில் தன்னைத் தவிர வேறு அரசியல் கட்சி எதுவும் இல்லாத ஒரு சூழ்நிலையிலே குடிப்பழக்கம் உடையவர்கள் தன்னில் அங்கத்தினராகச் சேருவதற்குத் தடைவிதித்தது இந்திய தேசீய காங்கிரஸ். அப்போது, அது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடும் பாசறையாக இயங்கியதேயன்றி, பார்லிமெண்டரி அரசியல் கட்சியாக அது இயங்கவில்லை அதனுலும், குடிப்பழக்கம் உடையவர்களை சேர்த்துக்கொள்ள மறுப்பது அதற்கு சாத்தியமானது அன்று.

இப்போதைய நிலை வேறு. அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் ஒன்றுகூடிப் பேசி, அப்படி ஒரு விதியைத் தத்தம் கட்சியளவில் உண்மையாக அமுல் நடத்த ஒப்புக்கொள்வதானுல், அது சாத்தியமாகும். அப்படிக்கின்றி, ஒரு கட்சி மட்டும் தனித்து நின்று குடிப்பழக்கம் உடையவர்கள் தன் உறுப்பினர்களாகாதவாறு தடை செய்துவிட்டால்,

வாக்காளர்களின் ஆதரவைப் பெறுவதிலே மற்றக் கட்சிகளுடன் போட்டியிட்டு அது வெற்றி காண முடியாது.

நாடு முழுவதிலுமிருந்து குடிப்பழக்கத்தை ஒழிப்பதன் மூலமாக ஒவ்வொரு அரசியல் கட்சியிலும் குடிகாரர்கள் இல்லாதபடி செய்வது ஒன்றுதான் அரசியல் கட்சிகளுக்கு இன்றுள்ள வழி. அதைத்தான் அறிஞர் அண்ணு முதல்வராக இருந்த போது தி. மு. க. ஆட்சி செய்தது. மாண்புமிகு எம். ஜி. ஆர். முதல்வராக உள்ள இன்றும் அ. இ. அ. தி. மு. க. ஆட்சியும் அதைச் செய்து வருகிறது.

மதுவிலக்குக் கொள்கையைச் சட்டபூர்வமாக அமுல் நடத்துவதனுல் கள் குடியைப் பெருமளவுக்கு ஒழித்துவிட முடிகிறது. வானளாவ ஓங்கியுள்ள தென்னே, பனே மரங்களிலிருந்து சட்டத்தை மீறி ரகசியமாக கள் இறக்குவதென்பது அனேகமாகச் சாத்தியமில்லே. அதனுல், மதுவிலக்குச் சட்டமானது கள் குடியை ஒழிப்பதிலே வெற்றி காண முடிகிறது. ஆனுல், இந்த வெற்றியைத் தோல்வியாக்கும் வகையிலே கள்ளச் சாராய உற்பத்தி பெருகி விடுகிறது. கள்ளச் சாராயம் உற்பத்தி செய்யும் இடத்தைக் கண்டு பிடிப்பதிலும் பரவலாக அதை விற்பனே செய்வதைத் தடுப்பதிலும் கஷ்டம் இருக்கிறது. அதனுல், பூரண மதுவிலக்கு வெற்றி பெறுவது இன்னும் எட்டாக் கனியாகவே இருந்து வருகிறது. இதனே ஒப்புக்கொள்வதற்கு மதுவிலக்கில் ஆர்வமுடையவர்கள் வெட்கப்படத் தேவை இல்லே ஆனுல், அரசியல் கட்சிகளும், மதுவிலக்குச் சட்ட அமுலில் ஈடுபடுத்தப்படும் போலீசாரும், பொதுமக்களும் பூரணமாக ஒத்துழைத்தால் கள்ளச் சாராய உற்பத்தியை ஒழித்துவிட முடியும்.

**துரதிர்ஷ்டவசமாக, இந்த நாட்டிலே எல்லாம் 'அரசியல்' ஆக்கப்பட்டுவிடுகிறது. அதுபோல, கள்ளச் சாராய விஷயமும் 'அரசியல்' ஆக்கப்பட்டுவிட்டது.**

*காங்கிரஸ ஆட்சிக்காலத்திலேயும் கள்ளச்சாராய உற்பத்தியும் விற்பனையும் இருந்தன என்றாலும், அதிலே 'அரசியல்' கலக்கவில்லை. கள்ளச் சாராய உற்பத்தியாளரும் விற்பனையாளரும் அரசியலுக்கு முற்றிலும் அப்பாற்பட்டவர்களாக இருந்தனர். அதனால், கள்ளச் சாராய உற்பத்தியையும் விற்பனையையும் போதிய அளவு கட்டுப்படுத்துவது காங்கிரஸ் அரசுக்கு எளிதாக இருந்தது.*

**துரதிருஷ்டவசமாக, காங்கிரஸ் கட்சி ஆட்சியை விட்ட பின்னர்த் தமிழகத்தில் நிலைமை மாறிவிட்டது. கள்ளச் சாராய உற்பத்தியாளரில்—விற்பனையாளரில் பலர் அரசியலில் புகுந்து விட்டனர்.**

**1971 அக்டோபர் முதல் 1973 அக்டோபர் வரையுள்ள 2 ஆண்டு காலத்திலே மதுவிலக்குச் சட்டம் 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டிருந்தது. கள்ளுக் கடைகளும் சாராயக் கடைகளும் தாராளமாகத் திறந்துவிடப்பட்டன**

**இந்தக் காலத்தில் அரசியல்வாதிகளாக உள்ள பலரும் மது வாணிபத்தில் ஈடுபட்டனர். கள், சாராயம் விற்கும் கடைகளை விளம்பரப்படுத்துவதிலும் அரசியல் பிரசாரம் திறமை காணப்பட்டது. மது குடிக்காதவர்களையும் குடிக்க வைக்கும் வகையில் அரசால் ''கவர்ச்சி''யான முறையில் மதுக்கடைகள் இருக்குமிடங்கள் விளம்பரப்படுத்தப் பட்டன.**

*1974க்குப் பின் திரும்பவும் பூரண மதுவிலக்கு தி. மு. க. அரசால் அமல் நடத்தப்பட்டதென்றாலும், கள்ளச் சாராய உற்பத்தியும் விற்பனையும் முன் எப்போதும் இருந்ததைவிடவும் அதிகப்பட்டுவிட்டன. அவற்றில் ஈடுபடுவோர்களில் பெரும்பாலோர் அரசியல்வாதிகளாகிவிட்டார்களாதலால், மதுவிலக்குச் சட்டத்தை அமுல்படுத்துவதிலே கட்சி விருப்பு வெறுப்புக் காட்டப்படுகிறதென்ற புகார் எழுந்துவிட்டது. இதற்குமேல் அதுபற்றி அதிகமாக விவரிக்க நான் விரும்பவில்லை.*

பொதுவாக, பூரண மதுவிலக்கானது தமிழகத்தைப் பொறுத்தவரை ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்குமான பலப் பரீட்சையாக ஆகிவிட்டதோ என்றுகூட எண்ணத் தோன்று சிறது.

பூரண மதுவிலக்குப் பிரச்சினைக்குப் பின்னே ஒரு மகத் தான வரலாறு இருப்பதனைத் தமிழ் நரட்டிலுள்ள அரசியல் முதியவர்களில் ஒருவன் என்ற முறையில் நான் இங்கே எடுத் துக்காட்ட விரும்புகிறேன்.

1920 தொடங்கி 1945 வரையுள்ள கால் நூற்றாண்டுக் காலத்திலே மதுவை ஒழிப்பதற்கான போராட்டத்தில் காங் கிரஸ்காரர்கள் முழுமூச்சுடன் ஈடுபட்டிருந்தனர். கள்ளு, சாராயம், அபின், கஞ்சா போன்ற போதைப் பொருள்களை விற்கும் கடைகளை மறியல் செய்து பல லட்சக்கணக்கானவர் கள் சிறை புகுந்தனர். மதுக்கடைகள் முன்னே போலீஸ்கார ரால் கடுமையாகத் தாக்கப்பட்டு பல்லாயிரக்கணக்கான காங்கிரஸ்காரர்கள் படுகாயமுற்றனர்.

தேசபக்தி காரணமாகவும் காந்தியத்தில் கொண்டிருந்த பற்றுதலின் விளைவாகவும் விடுதலைப் போராட்டக் காலத்தில் மது வாணிபத்தில் ஈடுபட்டிருந்த பல்லாயிரவர் அதிலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டனர். கள் இறக்குவதற்காகத் தென்னை மரங்களைக் குத்தகைக்கு விட்டு வந்தோர், அதனைக் கைவிட்டு, வருவாயை இழந்தனர்.

இந்தத் தியாக வரலாற்றை நினைவில் கொண்டு பார்க்கும் போது மதுவிலக்குப் பிரச்சினை சம்பந்தமாக தமிழ் நாட்டில் இன்றுள்ள சூழ்நிலையானது தேசிய பாரம்பர்யத்தைச் சேர்ந்த என் போன்றவர்களுக்கு வேதனையைத் தருகின்றது. பொது வாகத் தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகள் ஒருமனப்பட்டு பூரண மதுவிலக்குச் சட்டத்திற்கு வெற்றி தேடும் நாள்

இனியேனும் வருமோ, என்றும் வாராமலே போய்விடுமோ என்று ஏங்குகிறது என் உள்ளம்.

பூரண மதுவிலக்குச் சட்டம் தமிழ்நாட்டில் நடைமுறைக்கு வந்த நாள் தொட்டு மது உற்பத்தியிலும் வாணிபத்திலும் சட்டத்திற்கு உட்பட்டு ஈடுபட்டிருந்த லட்சக்கணக்கானவர்கள் தொழிலையும் வாணிபத்தையும் இழந்தனர். மாற்றுத் தொழிலோ, வாணிபமோ அவர்களுக்குத் தருவது பற்றி முன்பிருந்த காங்கிரஸ் அரசோ, பின்வந்த தி.மு.க. அரசோ, சிந்தித்ததுகூட இல்லை.

குறிப்பிட்ட ஒன்றிரு சாதியாரே மது உற்பத்தியிலும் வாணிபத்திலும் சட்டத்திற்கு உட்பட்ட முறையில்—குடும்பம் குடும்பமாக ஈடுபட்டிருந்தனராதலால், மதுவிலக்கால் அவர்கள் வறுமை என்னும் படுகுழியில் வீழ்த்தப்பட்டு விட்டனர். இத்தகைய மகத்தான தியாகத்துக்குப் பின்னரும் மதுவிலக்குச் சட்டத்துக்கு வெற்றிதேட முடியவில்லையென்றால், அந்த வெற்றிக்குத் தடையாகவுள்ள அரசியல் சக்திகளை மக்கள் மன்னிக்க முடியுமா?

மனம் விட்டுச் சொல்லுகிறேன், தமிழ் நாட்டளவில் மதுவிலக்குச் ச்ட்டம் முழு அளவில் வெற்றி பெற வேண்டுமென்றால், இந்தப் பிரச்சினை ஒன்றிலேனும் ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிகளுக்குமிடையேயுள்ள "கெடுபிடிப் பூசல்" மறைந்தாக வேண்டும்.

மதுவிலக்கு என்பது ச்மூக சீர்திருத்தப் பிரச்சினையாகும். இன்று ஆளும் கட்சியாகவுள்ள அ.இ.அ தி.மு.க. வும் பிரதான எதிர்க்கட்சியாகவுள்ள தி.மு.க. வும் சமூக சீர்திருத்தப் பாரம்பர்யத்திலிருந்து வந்தவையாகும். இந்த ஒன்றை நினைவில் கொண்டேனும் தமிழகத்திலுள்ள ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் பூரண மதுவிலக்குக்குப் பாடுபட ஒத்துழைக்க வேண்டும்.

# மதுவிலக்கும் தி. மு. க. வும்

தமிழக ஆளுநர் பிறப்பித்துள்ள 1937 ஆம் ஆண்டு மது விலக்குச் சட்டத்திருத்த அவசரச் சட்டத்தை முஸ்லிம் லீக் எதிர்த்துள்ளது. லீக், மதுவிலக்குக் கொள்கையைக் கொண்டது. அது இஸ்லாம் தருமம் என்றும் கூறிவருவது. முன்னர் தி. மு. க. ஆட்சிக் காலத்தில் மதுவிலக்குச் சட்டம் ரத்து செய்யப்பட்டபோது, அதனைக் கடுமையாக எதிர்த்தது முஸ்லிம் லீக். அதே லீக் இப்போது அ.இ.அ.தி.மு.க அரசு மதுவிலக்கைத் தீவிரமாக அமுல் நடத்த முன்வரும் போது, அதை எதிர்ப்பானேன்? அவசரச் சட்டம் கடுமையான தென்று தனது எதிர்ப்புக்குக் காரணம் காட்டுகின்றது முஸ்லிம் லீக். இதுதான் காரணமென்றால், சிறிது அனுதாபத் துடனேனும் அந்த எதிர்ப்பைத் தெரிவித்திருக்கலாமே! மாறாக, எதிரியின் போர்க் குரலிலே எதிர்ப்பு தெரிவிப்பானேன்?

இரு கம்யூனிஸ்டுக்கட்சிகளும் அவசரச் சட்டத்தை எதிர்த் துள்ளன. குடிப் பழக்கத்தை அவை விரும்பவில்லை யென்றாலும், அதனை சட்டத்தின் மூலம் ஒழிக்க முயல்வதை எதிர்த்து வருகின்றன.

ஜனதா, இந்திரா காங்கிரஸ் கட்சிகள் மதுவிலக்கு அவசரச் சட்டத்தை ஆதரித்துள்ளன. இது வரவேற்கத் தக்கதாகும். ஸ்வரண்சிங் காங்கிரசைச் சார்ந்த பெரியவர் பக்த வத்சலனாரும் அவசரச் சட்டத்தை ஆதரித்திருக்கிறார். காந்தியப் பாரம்பர்யக் கட்சிகள் இந்த விஷயத்தில் தடம் புரளாமல் இருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. கருப்பையா மூப்பனார் அவச்ரச் சட்டத்தை வரவேற்றும், அதனை எதிர்க்கும் தி.மு.க. தலைவரைக் கண்டித்தும், 'இதில் கூடவா கலைஞர் கருணாநிதி அரசியல் காழ்ப்பைக் காட்டுவது?' என்று கேட்டும் வெளியிட்டுள்ள அறிக்கை 7—10—78 "மக்கள் குரல்" பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது. காந்தியப் பாரம்பர்யக் கட்சிகள் மதுவிலக்கு அவசரச சட்டத்தை ஆதரித்தால் மட்டும் போதாது. அதற்கு வலுத்தேட தொடர்ந்து பிரசாரம் செய்யவும் முன் வர வேண்டும்.

மதுவிலக்கு அவச்ரச் சட்டம் கடுமையான விதிகளைக் கொண்டதாக இருப்பதால்தான் அதனை தான் எதிர்ப்பதாக தி.மு க. காரணம் காட்டுகின்றது. இது, ஏற்க முடியாததாகும். அ.இ.அ. திமுக விடம் ஜென்மப் பகைமை காட்டுகிறது தி.மு.க. அது செய்யும் நல்லதை ஆதரிக்கவும் அது முன் வருவதில்லை. ஏதேனும் ஒரு போலிக் காரணம் சொல்லி எதிர்ப்புக் காட்டி வருகிறது. அந்த வகையைச் சார்ந்தது தான் அவசரச் சட்டத்திற்கு அது காட்டும் எதிர்ப்பு.

அவசரச் சட்டம் மதுவிலக்குச் சட்டத்தை மீறுவோருக்குத் தண்டனையை அதிகமாக்குகின்றது. இது கடுமையானது தான். இதற்காகத்தான் தி.மு.க. அவசரச் சட்டத்தை எதிர்க்கிறதென்றால், அது ஆட்சி புரிந்த போது, மதுவிலக்குச் சட்டத்தை மீறுவோருக்கு எதிராக 'மிசா' சட்டத்தையே பயன்படுத்தி, ச்மூக விரோதிகளை விசாரணையின்றிச் சிறையில் அடைத்ததே, எதனால்? அவசரச் சட்டத்தின்படி ஒருவர் கைது செய்யப்பட்டால், அவர் ஜாமீனில் வெளிவந்து எதிர் வழக்காடலாம். நீதிமன்றத்தில் குற்றம் மெய்ப்பிக்கப்படாவிடில் விடுதலையாகவும் சந்தர்ப்பம் உண்டு. தண்டிக்கப்பட்டால், அதனை எதிர்த்து அப்பீல் செய்து கொள்ளலாம். அ.இ.அ.தி.மு.க. அரசின் அவச்ரச் சட்டம் இவ்வளவு சந்தர்ப்பகளை சமூக விரோதிகளுக்கு அளிப்பது ஜனநாயகம் அல்லவா?

''அல்ல'' என்று தி.மு.க. கூறுமானால், விசாரணையே இல்லா மல் ஆண்டுக் கணக்கில் சிறையில் அடைக்கும் வகையில் ''மிஸா'' சட்டத்தைப் பயன்படுத்தியதே திமுக அரசு, அது தான் ஜனநாயகமோ?

தி. மு. க. ஆட்சிக் காலத்தில் மதுவிலக்குச் சட்டத்தை மீறியவர்களுக்கு எதிராக மிசா சட்டம் பயன்படுத்தப் பட்ட தையும் தமிழரசுக் கழகம் ஆதரித்தது. அதன்படித்தான் இப்போது அ. இ. அ. தி. மு க. அரசு கொண்டு வந்துள்ள அவசரச் சட்டத்தையும் ஆதரிக்கிறது. கழகம் கொள்கை வழிச் செயல்படுகின்றது.

''மதுவிலக்கு அகில இந்திய ரீதியில் செயல்படுத்தப்பட வேண்டிய கொள்கையாயிருக்க, அதற்காகத் தமிழகத்தில் மட்டும் அவசரச் சட்டம் பிறப்பிப்பானேன்? அகில இந்தியா விலும் இது போன்ற அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்கும்படி ஜனதா அரசை ஏன் அ தி. மு. க. அரசு கேட்டிருக்கக் கூடாது?'' என்பது திமுக தலைவரின் கேள்வி.

அவசரச் சட்டம் ஜனநாயக விரோதமானது என்றால், அதனை அகில இந்தியாவிலும் அமுல் நடத்தக் கேட்பது ஜனநாயகமாகி விடுமோ?

1937ல் கூட, அப்போது ராஜாஜி தலைமையில் இயங் கிய காங்கிரஸ் ஆட்சி, சென்னை மாகாண அளவில்தான் மது விலக்குச் சட்டத்தைக் கொண்டு வந்தது.

அதன் பின் 1947ல் மத்தியிலே காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்ட பின்னும் மதுவிலக்குக் கொள்கையை அமுலாக்குவது மாகாண அரசுகளின் விருப்பத்துக்கு விடப்பட்டு வந்திருக்கிறது. மாநிலங்களுக்குச் சுயாட்சி கோரும் திமுக இதிலே மட்டும் மத்திய அரசுக்கு மேலும் அதிகாரம் தர விரும்புவானேன்?

1971ல் அகில இந்தியாவிலும் மதுவிலக்குச் சட்டத்தை அமுல் நடத்த மத்திய அரசு முன் வரும்வரை தமிழ் நாட்டில் மதுவிலக்குச் சட்ட அமுலை நிறுத்தி வைப்பதென்று தி. மு க. அரசு முடிவெடுத்தது. பின்னர் மத்திய அரசு அதன் கோரிக்கையை ஏற்காத நிலையில் திரும்பவும் இரண்டாண்டு கழித்து மதுவிலக்குச் சட்டத்தை அமுல் நடத்த தி. மு. க அரசு முன் வந்ததே, எதனுல்? தீண்டாமை ஒழிப்பு அகில இந்தியக் கொள்கையாக இருந்தும் திருக்கோயில்களில் தீண்டாதாரையும் அர்ச்சகர்களாக்கும் சட்டத்தைத் தமிழக அளவில் அமுல் நடத்த திமுக அரசு மசோதா கொண்டு வந்ததே, எதனுல்?

"சுகஜீவிகளுக்குப் பெர்மிட் வழங்கும் முறையை அமுலில் வைத்துக் கொண்டு, குடிப்பழக்கத்திற்கு இரையான ஏழை எளியவர்களை மட்டும் கடுமையாகத் தண்டிப்பதா?" என்று கேட்கிறது, தி. மு. க. இந்தக் கேள்வியில் கொஞ்சம் பசையுண்டு. பெர்மிட் முறையைத் தமிழரசுக் கழகம் என்றுமே ஆதரித்ததில்லை. சட்டப் பேரவையிலும் மேல் அவையிலும் எதிர்த்து வந்திருக்கிறது. இப்போது ஆளுநர் மேதகு பிரபுதாஸ் பட்வாரி பெர்மிட் முறையும் விரைவில் கைவிடப் படுமென்று அறிவித்திருக்கிருர். இனியேனும் திமுக அவசரச் சட்டத்தை ஆதரிக்க முன்வரலாமே!

எதிர்க்கட்சிகளை ஒழித்துக் கட்ட மதுவிலக்கு அவசரச் சட்டத்தை அ. தி. மு க. அரசு பயன்படுத்தக் கூடுமென்று திமுக தலைவர் கலைஞர் ஐயந் தெரிவித்திருக்கிருர். "எதிர்க் கட்சிகள்" என்று பன்மையில் அவர் கூறியிருப்பினும் உண்மையில் திமுக அழிக்கப்பட்டு விடுமென்றுதான் அவர் அஞ்சுகின்ருர். திமுகவைத் தவிர வேறு அரசியல் கட்சி எதுவும் இந்த ஐயத்தை எழுப்பவில்லையென்பது மக்கள் நினைவில் கொள்ளத் தக்கதாகும்.

தி. மு. க. வுக்கு மட்டும் இந்த ஐயம் எழுவானேன்? மதுவிலக்குச் சட்டத்தை மீறும் சமூக விரோதி ஒருவர் ஏதே

னும் ஒரு அரசியல் கட்சியைச் சார்ந்தவராக இருப்பாரானால், அதற்காக அவரை விட்டுவிட வேண்டுமா? இதை ஏற்பதா னல், அப்புறம் ஒரு சட்டத்தையும் அமுல் நடத்த முடியாதே! தமிழ் நாட்டிலேதான் அரசியலானது சமுதாயத்தின் அடித் தளத்திலுள்ளவர்களிடம் செல்லச் செல்ல சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவோரெல்லாம் அரசியல் கட்சிகளில் கலந்து மறைவது சாத்தியமாகி விட்டது. இது ஜனநாயகத்தி லுள்ள பலவீனமாகும். இத்தகையவர்களை கட்சியிலிருந்து அப்புறப்படுத்த தலைவர்கள் முயல வேண்டும். அதை விட்டு சமுக நலச் சட்டத்தையே எதிர்ப்பதா?

திராவிட இயக்கம் ஒரு கால கட்டத்திலே மதுவிலக்கைக் கொள்கையளவில் கூட ஏற்க மறுத்து, எதிர்த்து வந்ததுண்டு. சுயமரியாதைச் சங்கம், திராவிடர் கழகம் ஆகியவற்றின் மேடைகளில் மதுவிலக்குக் கொள்கையை எதிர்த்துப் பிரசாரம் நடந்ததுண்டு

நல்ல வேளையாக, அண்ணாவின் தலைமையில் தி. மு. க. தோன்றிய பின், மதுவிலக்குக் கொள்கையை ஆதரிக்கும் மாறுதலை அவர் தோற்றுவித்தார். அவரது தலைமையில் தி. மு. க. ஆட்சி தோன்றியபின், அதற்கு முன் காங்கிரஸ் ஆட்சி தோற்றுவித்த மதுவிலக்குச் சட்டத்தை மனநிறைவோடு அமுல் நடத்தலானார்.

துரதிருஷ்டவசமாக, அறிஞர் அண்ணா மறைந்து, கலைஞர் கருணாநிதி தலைமையில் தி.மு.க. வந்தபின், மதுவிலக்கில் அது தடம் புரண்ட போக்கில் செயல்படத் தொடங்கியது. 1969ல் தி.மு க. தலைமையை கலைஞர் மு. கருணாநிதி ஏற்றதுமே, "மது விலக்கால் ஏற்படும் பொருள் இழப்பை மத்திய அரசு ஈடு செய்யாவிட்டால், தமிழகத்தில் மதுவிலக்கு கைவிடப்படும் என்று தொடர்ந்து இரண்டாண்டு காலம் பிரசாரம் செய்து வந்து, தன் கட்சியினரையும் தமிழக மக்களையும் மதுவிலக்குக்கு எதிரான போக்கில் தயாரித்து வந்தார். பின், 1971ல் மது விலக்குச் சட்டத்தை ரத்து செய்து நாடு முழுவதும் கள்ளு.

சாராயக் கடைகளைத் திறந்தார். அதன் பின்னர், திரும்பவும் மதுவிலக்குச் சட்டத்திற்குப் புத்துயிரளித்து, கள்ளு சாராயக் கடைகளை மூடினுரென்ருலும், தமிழ் நாட்டிலே சர்க்கரை ஆலைகளில் கிடைக்கும் கழிவுப் பொருள்களைக் கொண்டு ஒரு வகைச் சாராயம் தயாரிக்க கலைஞர் கருணாநிதி ஆட்சி வழி வகுத்தது. அதற்கெனத் தனியாக ஒரு சட்டத்தையே கொண்டு வந்தது.

''மதுவிலக்குச் சட்டத்தை அமுல் நடத்தும் தி. மு. க. அரசு, சாராய உற்பத்தியில் ஈடுபடுவதா?'' என்று சட்டப் பேரவையில் தமிழரசுக் கழகத் தலைவர் என்ற முறையில் நான் கேட்டபோது, ''தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் சாராயம் மதுவிலக்குச் சட்டம் அமுலில் இல்லாத அயல் மாநிலங்களில் விற்கப்படும்'' என்று தி மு க அரசின் சார்பில் சமாதானம் சொல்லப்பட்டது. இந்தச் சமாதானத்தை ஏற்காமல் சாராய உற்பத்திக்கு வழிவகுக்கும் மசோதாவுக்கு எதிராக சட்டப் பேரவையில் வாக்களித்தேன்.

இப்படி, மதுவிலக்குக் கொள்கையில் அண்ணாவைப்போல உறுதி காட்டாமல், தாம் தி. மு, க. வின் தலைமையை ஏற்ற நாள் முதலே ஊசலாட்டம் காட்டிவந்தார் கலைஞர் கருணாநிதி. அந்த வகையில்தான் இப்போது தோன்றியுள்ள மதுவிலக்கு அவசரச் சட்டத்தையும் அவர் எதிர்க்கிருர்.

காந்தியப் பாரம்பர்யத்தைச் சார்ந்த இந்திரா காங்கிரஸ், ஸ்வரண்சிங் காங்கிரஸ், ஜனதா கட்சி, காந்தி — காமராஜ் காங்கிரஸ் ஆகிய ஆக்கவழி அமைப்புகள் மதுவிலக்கு அவசரச் சட்டத்திற்கு ஆதரவளித்து அதற்கு வெற்றி தேடும் பிரச்சாரத்தில் தொடர்ந்து ஈடுபடவும் முன் வரவேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தைத் தவற விட்டால், அப்புறம் மதுவிலக்கு வெற்றி பெற வேறு சந்தர்ப்பம் வாய்க்காது. இந்த ஒன்றி வேனும் காந்தியப் பராம்பர்யத்தில் வந்த ஸ்தாபனங்கள் ஒன்றுபட்டுச் செயலாற்றுமாக! ['செங்கோல்', 15-10-78]

# மதுவிலக்குப் பிரசாரம் தேவையே!*

இந்த மதுவிலக்கு மாநாடு தமிழகத்தின் வரலாற்றிலே ஒரு புதிய ஏட்டைத் தொடங்கி வைப்பதாக நான் கருதுகிறேன். இந்த மாவட்ட ஆட்சித் தலைவரும், காவல்துறை உயர் அதிகாரிகளும் மதுவிலக்கில் வெற்றி காண வேண்டும் என்ற உறுதியோடு, இந்த மாநாட்டை நடத்துவோருடன் ஒத்துழைக்கிறார்கள் என்பதைக் கேட்டபோது, என் இதயம் பூரித்தது. அதிகார வர்க்கத்தின்—குறிப்பாக, காவல் துறையின் மனப்பூர்வமான ஒத்துழைப்புக் கிடைத்து விடுமானால், இந்தத் தஞ்சை மாவட்டத்தில் மட்டுமல்லாமல், தமிழ்நாடு முழுவதிலுமே குடிப்பழக்கத்தை ஒழித்துவிட முடியும்.

உடம்பு தேய உழைத்து, அந்த உழைப்புக்காக ஒரு அற்ப ஊதியத்தைப் பெற்று, அத்தஊதியத்தையும் மனைவி மக்களுக்காகச் செலவிடாமல் குடிப்பழக்கத்திலே தொலைத்து குடும்பத்தைப் பட்டினியிலே வாட விடுகிறார்களே உழைப்பாளி மக்கள், அத்தக் கொடுமையிலிருந்து அவர்களை மீட்க இந்த மாநாடு நடக்கிறது.

குடிப்போதைக்கு இரையான கணவன்மார் அறிவிழந்து அன்புக்குரிய மனைவியாரை அடித்துத் துன்புறுத்த, அதனால் ஆண்டாண்டுக் காலமாக அழுது கொண்டிருக்கிறதே தாய்க் குலம், அதன் அழு கண்ணீரைத் துடைப்பதற்காக இந்த மாநாடு நடக்கிறது.

நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் 6 ஐந்தாண்டுத் திட்டங்கள் ஒன்றன்பின் ஒன்றாக அமுல் நடத்தப்பட்டன; ஆலைகளும் தொழிற்சாலைகளும் தோற்றுவிக்கப்பட்டன; வாணிபம்

---

* தஞ்சை மதுவிலக்கு மாநாட்டில் பேசியது.

வளர்க்கப்பட்டது ; வேலை வாய்ப்பு விரிவாக்கப்பட்டது. இவற்றின் விளைவாக, உழைப்பவர்களுக்கு நல்ல ஊதியம் கிடைக்கிறதென்றாலும், அந்த ஊதியத்தைக் குடிப்பழக்கத்தில் தொலைத்து, வறுமையையே சாபமாகப் பெற்றுவிட்டார்களே, அந்த மக்களை அந்தச் சாபத்திலிருந்து மீட்பதற்கு இந்த மாநாடு நடைபெறுகிறது.

இந்த மாநாட்டை நடத்துவோருக்கும், இதிலே கலந்து பேசுகின்ற எனக்கும், எனக்கு முன் பேசிய, பின்னேயும் பேச விருக்கிற பேச்சாளர்களுக்கும், எதிரே வெள்ளம்போல குழுமி எங்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கும் உங்களுக்கும் புண்ணியம் தேடித் தரும் புனித அரங்காக இந்த மாநாட்டை நான் கருதுகிறேன். உங்களில் ஒவ்வொருவரும் அப்படியே கருத வேண்டுமென்றும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

நான் தொடர்ந்து 55 ஆண்டுக் காலமாகப் பொதுவாழ்க்கையில் ஈடுபட்டு வந்திருக்கிறேன். அதிலே முன் பகுதியான 20 ஆண்டுக் காலத்திலே மதுவை ஒழிக்கும் போராட்டத்தில் நேரடியாக ஈடுபட்டிருந்தேன். அதை இன்று நினைத்தாலும் மகிழ்ச்சியால் இதயம் விம்முகிறது.

குடிப் பழக்கத்தின் கொடுமையை நான் நன்கறிவேன். நானே குடித்துக் கெட்டதால் அல்ல ; ஆண்டவன் அந்த இழி நிலைக்கு என்னைத் தள்ளவில்லை. மதுவை உற்பத்தி செய்யும் குலத்தில் பிறந்ததால்—மதுவருந்தும் கொடிய பழக்கத்திற்கு ஆளாகிவிட்ட துர்ப்பாக்கியசாலியின் மகனாகப் பிறந்ததால்—குடிகாரக் கணவனிடம் அடிபட்டு, விம்மி, பொருமி அலறி அழுத நிலையில் என் தாயை பல நூறு சந்தர்ப்பங்களில் நான் பார்த்ததால்—குடிப்பழக்கத்திற்கு ஆளானவர்கள் நிறைந்த குடியிருப்பிலே பல்லாண்டுக் காலம் நான் வாழ்ந்ததால், குடிப் பழக்கத்தின் கொடுமைகளை வேறு எவரையும் விட நன்றாக அறிந்திருக்கிறேன். அது காரணமாகவும் எனது

பொது வாழ்க்கையின் தொடக்க காலத்திலே மதுவை ஒழிக்கும் போராட்டத்திலே நான் மனமார விரும்பி வலுவில் சென்று பங்கு கொண்டேன்.

கள்ளு, சாராயக் கடைகள் முன்பு மறியல் செய்திருக்கிறேன். கள்ளுக்கடை சொந்தக்காரர்களால் ஏவி விடப்பட்ட காலிகளிடம் அடிபட்டிருக்கிறேன். இழிமொழிகளைக் கேட்டிருக்கிறேன். மது உற்பத்தியில் ஈடுபட்டிருந்த தந்தையையும், மது விற்பனையில் ஈடுபட்டிருந்த தம்பியையும் அந்தத் தொழில்களிலிருந்து விடுவித்த காரணத்தால், என் குடும்பத்தைப் பட்டினி போட்ட "பாவத்"தை நான் சுமந்தது உண்டு.

மதுவிலக்குப் போராட்டத்தால் வருவாயை இழந்த மது விற்பனையாளர்களும், மது உற்பத்தியில் ஈடுபட்ட தொழிலாளர்களும், "இவன் குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பு" 'குலத்துரோகி" என்றெல்லாம் என்னை ஏசவும் பேசவும் கேட்டிருக்கிறேன். இவ்வளவுக்கும் நான் பெற்ற கூலி ஒன்று உண்டென்றால், என் தாய் இனமான தமிழினத்தை, தாயகமான பாரதத்தை மதுப்பழக்கத்திலிருந்து விடுவிக்கும் புண்ணியப் பணியில ஈடுபட்டிருக்கிறோம் என்ற மனத் திருப்தி தான் !

தமிழ்ப் பெருமக்களே! இந்த மாநாட்டின் பின்னே ஒரு மாபெரும் சரித்திரம் இருக்கிறது. அந்தச் சரித்திரத்தின் முதல்வர் காந்தியடிகள் ஆவார். விடுதலைப் போராட்டத்தின் தலைமையை காந்தியடிகள் ஏற்ற பின்னர், மதுக்கடை மறியலும் போராட்டத் திட்டங்களில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டது

தனது விடுதலைக்காகப் போராடிய எந்த ஒரு நாடும் அந்தப் போராட்டத்தின் தளபதியாகத் திகழ்ந்த ஒரு தலைவனும் மதுக் கடைகளை மறியல் செய்வதைப் போராட்ட முறைகளில் ஒன்றாகக் கடைப் பிடித்ததில்லை. இந்த இந்திய

நாட்டில்தான்—இங்கும் விடுதலைப் போரின் தலைமையை காந்தியடிகள் ஏற்ற பின்னர்தான்—மதுக்கடைகளை மறியல் செய்வது விடுதலைப் போராட்டத்தோடு இணைந்தது. அன்னிய ஏகாதிபத்திய அரக்கனிடம் இருந்து மட்டுமல்லாமல், உள் நாட்டு மதுவரக்கனிடமிருந்தும் மக்களுக்கு விடுதலை தேடித்தர முயன்றது, விடுதலை வீரர்களின் பாசறை.

தேசபக்தி கொண்ட மக்கள் தங்களுக்குச் சொந்தமான தென்னை மரங்களை கள் இறக்குவதற்கு விட மறுத்தார்கள், அந்தக் காலத்திலே! அதனால், ஆண்டுதோறும் தங்களுக்கு வந்து கொண்டிருந்த ஆயிரக்கணக்கான ரூபாய்களை இழந்தார்கள்.

கள்ளுக் கடைகள் முன்பு மறியல் செய்தோம்; மறியல் சட்ட விரோதமாக்கப்பட்டது. சட்டத்தை மீறியும் மறியல் செய்தோம். அந்த மறியல் போரிலே தேசம் முழுவதிலும் லட்சக் கணக்கான தொண்டர்கள் சிறைத் தண்டனை பெற்றார்கள். கள்ளுக் கடை முதலாளிகளால் ஏவி விடப்பட்ட காலிகள் மறியல் தொண்டர்களின் முகத்திலே காரித் துப்பினார்கள். அவர்களை இழி மொழிகளால் ஏசினார்கள். அவர்கள் மண்டைகளை அடித்து நொறுக்கினார்கள். அடிபட்டதால் ஒழுகிய ரத்தத்தைத் துடைத்துக் கொண்டு, "ஐயா, மதுவை அருந்தி மதியை இழக்காதீர்கள்!" என்று குடிகாரர்களைப் பார்த்து கெஞ்சிக் கேட்டுக் கொண்டோம். இந்தச் சரித்திரப் பின்னணிக்கு வெற்றி தேடுவதற்காகவே மதுவிலக்கு மாநாடு இங்கே நடத்தப்படுகிறது.

இந்தியாவிலேயே தமிழ் நாட்டிலும் குஜராத்திலும்தான் முழு அளவில் மதுவிலக்குச் சட்டம் அமுலில இருக்கிறது. ஆம்; மதுவிலக்கு அமுலில் இருக்கிறது என்று நான் சொல்லவில்லை; மதுவிலக்குச் சட்டம் அமுலில் இருக்கிறது என்றுதான் சொல்கிறேன். அந்தச் சட்டத்திற்கு முழு அளவில் வெற்றி தேடத்தான் இந்த மாநாடு நடக்கிறது.

தமிழகம் திருவள்ளுவரைப் பெற்ற திருநாடு அவர்தம் திருக்குறளிலே, "கள்ளுண்ணாமை" என்ற பெயரில் பத்து பாக்களைக் கொண்ட ஒரு அதிகாரமே படைக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் தோன்றிய கவிஞர்களிலே, குறிப்பாக, தமிழ் இந்தியா பெற்றெடுத்த புலவர்களிலே கள்ளுண்ணாமையைப் போதித்த முதற் புலவர் திருவள்ளுவர்தான். இந்தப் பின்னணியில்தான் தமிழகத்தில் மதுவிலக்குச் சட்டமேனும் அமுலுக்கு வர முடிந்திருக்கிறது.

முதன் முதலில் மதுவிலக்குச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்த பெருமை இந்திய மாநிலங்களிலேயே தமிழ் மாநிலத்திற்கே உரிமையாகும். 1937 அக்டோபர் 2 ஆம் நாளிலே அப்போதைய சென்னை மாநிலத்தின் முதல்வராக இருந்த ராஜாஜி அவர்கள், சேலம் மாவட்டதில் மதுக் கடைகளை அடியோடு ஒழிக்கும் வகையில் மதுவிலக்குச் சட்டத்தை அமுல்படுத்தினார். அதற்குப் பின்னர்தான் மற்ற மாநிலங்கள் குடிப்பழக்கத்தைத் தடை செய்யும் சட்டத்தைக் கொண்டு வந்தன.

குஜராத் மாநிலம் காந்தியடிகள் பிறந்த திருநாடு. அதனாற்றான், அந்த மாநிலத்திலும் முழு அளவில் மதுவிலக்குச் சட்டம் இன்னமும் நடைமுறையில் இருக்கிறதுபோலும்!

இடைக் காலத்தில் தமிழக அரசு மதுவிலக்குக் கொள்கையிலே தடம்புரண்டது உண்டு. இரண்டாண்டுக் காலம் மதுக் கடைகளை அனுமதித்து, திரும்பவும் மது அரக்கனைப் போஷிக்கத் தொடங்கியது. ஆனால், அதிலே ஊன்றி நிற்க அதனால் முடியவில்லை. அதனால, தமிழகத்தில் மறுபடியும் மதுவிலக்குச் சட்டம் முழு அளவுக்கு அமுலுககு வந்தது.

அறிஞர் அண்ணு அவர்கள் தமிழக முதல்வராக இருந்த போது மதுவை ஒழிப்பதில் ஆர்வம் காட்டினர். அகில இந்திய மதுவிலக்கு மாநாட்டிலே கலந்துகொண்டு,

> "கேவலம் வருவாயைக் கருதி எனது அரசு மக்கள் குடித்துக் கெடுவதற்கு அனுமதிக்காது. மதுவிலக்குச் சட்டதனை அமுல்படுத்துவதால எனது அரசு இழககும் வருவாயை ஈடு செய்யுமாறு இந்திய அரசைக் கேட்பேன், கேட்கிறேன். அது கிடைக்காவிட்டாலும், மதுவிலககுச் சட்டத்தை எனது அரசு அகற்ருது; முழு அளவில அமுல் நடத்தும்."

என்று முழங்கினர். அந்த அறிஞர் பெருமகனரின் முயற்சிக்கு வெற்றி தேட இந்த மாநாடு இங்கே நடத்தப்படுகிறது.

தமிழ்ப் பெருமக்களே! இன்றைய முதல்வர் மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் இயறகையாகவே மதுப் பழக்கதனை வெறுப்பவர். மதுப் பழக்கத்தைக் கைவிடுமாறு தமது கலைஞர் குலத்திற்குப் போதிபபவர். அதனல், அரசுப் பொறுப்பை ஏற்ற நாளிலிருந்து அண்ணல் காந்தியடிகளின் — அறிஞர் அண்ணுவின் அடிச் சுவட்டில் நடை போடுகிருர், இந்தப் பிரச்சினையிலே!

கள்ளச் சாராய அரக்கனை ஒழிப்பதிலேயும் இன்றைய முதல்வர் ஆர்வங் காட்டிவருகிறார். அவருடைய முயற்சிக்கு வெற்றி தேடித் தருமபடி இங்கே குழுமியுளள உங்கள் அனைவரையும் கை கூடபி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்சத் தலைமுறையில் கள்ளச் சாராயத்தை ஒழிக்கத் தவறினல், மது விலககுச் சட்டத்திற்கு வெற்றி தேடும் வாயபபை இழநதால, அடுத்து வரும தலைமுறைகளில் மதுவை ஒழிகக முடியாது. மதுப பழககத்தை ஒழிபபதற்கு நமது தலைமுறைதான கடைசி தலைமுறையாகும்.

படித்தவர்களிடையே குடிப் பழக்கம் பரவி வருகிறது. ஐயோ! இந்தக் கொடிய பழக்கம் மாணவர் உலகத்தையும் பிடித்துக் கொண்டுவிட்டதாகக் கேள்விப்பட்டபோது நெஞ்சம் திடுக்கிட்டது மதுவிலக்குச் சட்டம் அமுலில் இருந்தும், படித்தவர்களால் குடிப் பழக்கம் ஒரு நாகரிகமாக கருதப்படுகிறது. படித்தவர்களின் எண்ணிக்கை பெருகப் பெருக, கூடவே குடிப் பழக்கமும் பெருகி வருகிறது. நாளடைவில் அது சட்ட சம்மதமாகிவிடலாம். அதனாற்றான் சொல்கிறேன், குடிப் பழக்கத்தை ஒழிக்க இதுதான் கடைசி தலைமுறை என்று!

இன்றைய முதலமைச்சர் மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் கள்ளச் சாராயத்தை ஒழிப்பதிலே வெற்றி காணாவிடில் இனி வரவிருக்கும் முதல்வர்களில் எவருமே வெறறி காண முடியாது. இது யான் தரும் சாபம் அல்ல; சமுதாயத்தின் இன்றைய நிலை போதிக்கும் பாடம்!

தமிழ்ப் பெருமக்களே! நான் இந்த மேடைக்கு வருவதற்கு முன்பு தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் இங்கே ஒரு பட்டி மன்றம் நடைபெற்றிருககிறது. அதிலே, "மது ஒழிப்பு முழுமையாக வெற்றி பெற மிகுதியாகத் துணை நிற்க வேணடுவது சமுதாயமே!" எனறு ஒரு சாராரும், "சட்டமே!" என்று ஒரு சாராரும் வழக்காடியிருக்கிறனர். "சமுதாயமே!" என்று அடிகளார் தீர்ப்பளித்திருக்கிறார். சட்டம் இன்றியே சமுதாயத்தின் முயற்சியாலேயே மதுவை ஒழித்துவிட முடியும் என்பது அடிகளார் தந்த தீர்ப்பின் பொருளாக இருகக முடியாது.

"சமுதாயமே!" என்பதிலுள்ள தேற்றேகாரம் சந்தேகத்தைத் தருகிறது. சமுதாயமா, சட்டமா? என்ற வினாவின் அடிப்படையிலே இந்தப் பிரச்சினையை விவாதிப்பதற்கு இது மேடை அல்ல. மதுவை ஒழிப்பதற்கு சட்டம் தேவை. அந்தச்

சட்டத்திற்குச் சமுதாயத்தின் ஒத்துழைப்பும் தேவை. அந்த ஒத்துழைப்பைத் திரட்டுவதற்காகத்தான் இந்த மாநாடு நடத்தப்படுகிறது. சமுதாயத்தின் ஒத்துழைப்பின்றிச் சட்டத்தின் மூலமே மதுவை ஒழித்துவிட முடியும் என்று இன்றைய முதல்வர் எம். ஜி. ஆர். நம்புவாரானால், இந்த மாநாடே தேவையில்லை. அவரோ, ஆளுநரோ, நானோ இந்த மாநாட்டில் கலந்துகொண்டு பேச வேண்டிய அவசியமும் இல்லை. போலீசாரை நம்பியே ஒதுங்கி நின்றிருக்கலாம். சமுதாயத்தின் ஒத்துழைப்பின்றி சட்டத்தின் மூலமே வெற்றி கண்டுவிட முடியாது என்று நம்பித்தான் இந்த மாநாட்டை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

குடிப்பது தனி நபர் சுதந்திரமாம்! அதிலே அரசு தலையிடக் கூடாதாம! தலையிடுவது, சட்டத்தின் மூலம் குடிப்பதைத் தடுப்பது தனிநபர் சுதந்திரத்தைப் பறிப்பதாம்! இப்படியும் பேசப்படுகிறது. பேசுவோர் யாரோ அல்ல; படித்துப் பட்டம் பெற்றவர்களே பேசுகின்றனர். குடிப்பதற்கு உரிமை உண்டு என்று மதுவிலக்குச் சட்டத்தை எதிர்த்து நீதி மன்றத்திலே வழக்குகூடத் தொடரப்படுகிறது.

கள்ளுண்ணாமையை வள்ளுவர் போதித்தார் என்று சான்று காட்டி நாம் மதுவிலக்குப் பிரசாரம் செய்கிறோம் இதனை ஏற்க மறுப்போர், "புலால் உண்ணாமையை வள்ளுவர் போதித்தார் என்பதற்காக புலால் உண்பதைச் சட்ட விரோதம் ஆக்கி விடுவீர்களா?" என்று கேட்கிறார்கள்.

புலாலை வெறுப்பது ஆன்மிக அடிப்படையில்; பொருளாதார அடிப்படையில் அல்ல! புலாலை உண்பவன், அதனால் அறிவிழந்து, பிறருக்குத் தீங்கிழைப்பதில்லை. குடியால அறிவு கெடுகிறது. குடித்து அறிவிழந்தவன், பிறரைத் துன்புறுத்துகிறான் மனைவி, பக்களையே துன்புறுத்துகிறான். சட்டத்தையும் ஒழுங்கையும் மீறித் தெருச் சண்டையில் ஈடுபடுகின்றான்.

அதனாற்றான், குடிப் பழக்கத்தைச் சட்ட விரோதமாக்க வேண்டியிருக்கிறது.

நிச்சயமாக, குடிப்பது சமூக விரோதமான செயல்தான். திருவள்ளுவர் கள்ளுண்ணாமையைப் போதித்ததோடு நின்று விடவில்லை. குடிப் பழக்கத்தைத் தடுப்பதற்கு அரசே பொறுப் பேற்க வேண்டும் என்றும் அவர் கூறியிருக்கிறார். இப்படிச் சொன்ன முதற் கவிஞர் அவர்தான். புலால் உண்ணாமை பற்றிய போதனையை வள்ளுவர் அறத்துப் பாலிலே சேர்த் திருக்கிறார். கள்ளுண்ணாமையைப் பொருட் பாலிலே சேர்த் திருக்கிறார். அங்கும் "அரசியல்" என்னும் இயலோடு இணைத் திருக்கிறார். அதன் பொருள் என்ன? அரசே ஆணையிட்டு குடிப்பழக்கத்தை ஒழிக்க வேண்டும் என்பதுதான். காந்தியடி களும் இதையே சொன்னார். எந்த ஒரு சீர்திருத்தத்தையும் சட்டத்தின் மூலம் மக்கள் மீது திணிப்பதை காந்தியடிகள் விரும்பியதே இல்லை. அரிசன ஆலயப் பிரவேசத்திற்குச் சட்டம் இயற்ற வேண்டும் என்றார் மாளவியா. மக்கள் மன மாற்றம் ஏற்படாத நிலையிலே சட்டத்தால் பயன் இல்லை என்றார் அடிகள்.

அப்படிப்பட்டவர் குடிப்பழக்கத்தைச் சட்ட விரோத மாக்குவதற்கு மட்டும் இசைவு தெரிவித்தார். 1937ல் ஆறு மாநிலங்களில் காங்கிரஸ் அரசுகள் ஏற்பட்டபோது மது விலக்குச்சட்டம் கொண்டு வருமாறு அந்த அரசுகளை அடிகள் வற்புறுத்தினார்.

தனி நபர் சுதந்திரம் பற்றிப் பேசுவோர் திருவள்ளுவரை யும் காந்தியடிகளையும்விட அறிவாளிகளா? குடிப் பழக்கத் தைச் சட்ட விரோதமாக்குவது தனிநபர் சுதந்திரத்தைப் பறிப்பதாகும் என்றால், நடைமுறையிலுள்ள மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்தாக வேண்டும். செய்தால் என்ன ஆகும்? இரண்டாண்டுக் காலம் மதுவிலக்குச் சட்டத்தை

திமுக அரசு ரத்து செய்ததே. அப்பொழுது என்ன ஆனது? புதிய குடியர்கள் தோன்றினார்கள். அந்தக் காலத்தில்தான் மாணவர்களையும் குடிப் பழக்கம் பிடித்துக் கொண்டுவிட்டது என்று மதுவிலக்குக் கமிஷன் தந்த அறிக்கை கூறுகிறது. இந்த அனுபவத்திற்குப் பிறகுதானே மதுவிலக்குச் சட்டத்திற்குத் திரும்பவும் தி.மு.க. அரசு புத்துயிர் தந்தது? இதற்குப்பிறகும் மதுவிலக்குச் சட்டத்தைக் கைவிடுமாறு கேட்பதா?

மதுவிலக்குச் சட்டம் அமுலுக்கே வராதிருக்குமானால் அது வேறு விஷயம். அமுலுக்கு வந்தபிறகு, அதுவும் ஒரு தலைமுறை காலம் அமுலில் இருந்த பிறகு அதை ரத்து செய்வது சமுதாயத்தின் அழிவுக்கு அழைப்பு விடுவதாகும் என்ன பாடுபட்டேனும் மதுவிலக்குச் சட்டத்திற்கு வெற்றி தேடியாக வேண்டும். திரும்பிப் பார்க்காமல் முன்னேறியாக வேண்டும். அதற்காகத்தான் இந்த மாநாடு.

'மதுவிலக்குச் சட்டம் தேவையா? சட்டத்தின் துணையில்லாமலே சமுதாயத்தின் துணை கொண்டு மதுவை ஒழித்துவிட முடியாதா?' என்று விவாதிப்பதற்காக, இந்த இரண்டிலொன்றைத் தேர்ந்தெடுப்பதற்காக இந்த மாநாடு நடத்தப்படவில்லை. மதுவிலக்குச் சட்டத்திற்கு வெற்றி தேடும் ஒரே குறிக்கோளுடன்தான் இந்த மாநாடு நடத்தப்படுகிறது. என் எதிரே வெள்ளம்போல் குழுமியுள்ள தமிழ் மக்களை—தாய்க்குலத்தை என் இரு கரங்களாலும் இரந்து வேண்டுகிறேன், "மதுவிலக்குச் சட்டம் வெற்றி பெற அரசோடு ஒத்துழையுங்கள்." என்று.

இங்கு குழுமியுள்ளவர்களிலே குடிப்பழக்கம் உள்ளவர்கள் இருப்பார்களானால், அவர்களையெல்லாம் இரு கைகளாலும் கும்பிட்டுக் கேட்டுக் கொள்கிறேன், "அந்தக் கொடிய பழக்கத்தை இன்றோடு விட்டு விடுங்கள்" என்று!

'குடிப்பழக்கம் கொடுமையானதுதான் என்றாலும், அதனை அடியோடு ஒழித்து விடுவது சாத்தியமில்லை' என்று கூறப்படு கிறது. இப்படிக் கூறுவோர், அமெரிக்காவில் மதுவிலக்குச் சட்டம் தோற்றுப் போனதைச் சான்று காட்டுகின்றனர். சோவியத் ருஷ்யாவிலே சட்டத்தின் மூலம் மதுவை ஒழிப்பது சாத்தியமாகாமற்போனதையும் சான்று காட்டுகின்றனர்.

நான் சொல்லுகிறேன், 'உலகம் முழுவதிலும் குடிப் பழக்கத்தை ஒழிக்க முடியா விட்டாலும் இந்திய நாட்டில் ஒழிக்க முடியும்' என்று. உலகில் எந்த ஒரு நாட்டிலுமே குடிப்பது தவறு தான் என்று குடிகாரனே ஒப்புக்கொள்வதில்லை. இந்திய நாட்டிலேதான் குடிகாரனே ஒப்புக்கொள்கிறான் 'குடிப்பது குற்றம்' என்று.

பிறர் தன்னை அடையாளம் கண்டுபிடிக்க முடியாதபடி முக்காடு போட்டுக்கொண்டு கள்ளுக் கடையிலோ, சாராயக் கடையிலோ குடிகாரன் புகுவதை இந்த நாட்டிலேதான் பார்க்க முடியும். அப்பன் குடிகாரனாக இருப்பான்; ஆனால், மகன் குடிகாரனாவதை ஒப்புக்கொள்ள மாட்டான். "நான் தான் குடித்துக் கெட்டேன்; நீயாவது அந்தக் கொடிய பழக்கத் திற்கு ஆளாகாமல் இருக்கக் கூடாதா?" என்று மனமுருகிக் கேட்பான். ஒரு குடிகாரனுக்கு—அவன் குடிகாரன் என்பது தெரிந்தும்—தன் மகளைத் திருமணம் செய்து வைக்கும் தந்தையை இந்த நாட்டில் நாம் பார்க்க முடியாது "கள்ளுண் பவரை பெற்ற தாயும் வெறுப்பாள்" என்கிறார் திருவள்ளுவர்.

இப்படிப்பட்ட சூழ்நிலையையுடைய இந்திய நாட்டிலே மதுப் பழக்கத்தை ஒழிக்க இதுவரை முடியவில்லையென்றால், நாம் கடைப்பிடிக்கும் நடைமுறையிலுள்ள குறைபாடுதான் அதற்குக் காரணமாகும்.

இஸ்லாமிய மதம் குடிப்பழக்கத்தை அடியோடு வெறுக்கிறது. இந்து மதமோ, குடிப்பதை பஞ்சமா பாதகங்களுள் ஒன்றாகக் கூறுகின்றது, களவாடல், 'கொலை செய்தல்' வ்பசாரம், சூது ஆகிய நான்கு பாவங்களுக்கும் முன்னேடியாக நிற்பது குடிப்பழக்கம்தான் என்கின்றன இலக்கிய ஏடுகள். "குடித்து அறிவை இழந்தவன் ஏனைய நான்கு பாவங்களையும் செய்வான்" என்று சான்றோர்கள் கூறியிருக்கின்றனர். கிறித்துவச் சான்றோரும் மதுவை வெறுத்துக் கூறுகின்றனர்.

ஏந்தப் பின்னணியைக் கொண்டு, குடிப்பழக்கத்தை ஒழிப்பதில் நாம் வெற்றி காண முடியும். குடிப்பழக்கத்தை ஒழிப்பதில் நமக்குள்ள சக்தியோ, சாதனங்களோ வேறெந்த நாட்டிலும் இல்லை. ஆகவே, அமெரிக்காவைக் காட்டியோ, ருஷ்யாவைக் காட்டியோ குடிப்பழக்கத்தை சமூக நீதியாக்கி விடுவது தேசபக்தியல்ல!

அகிம்சை பலத்தால் மிகப் பெரிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து விடுதலை பெற்ற நாடு இந்தியாவைத் தவிர வேறு ஒன்று உண்டா? அந்தப் புதுமையையே நிகழ்த்திக் காட்டிய நாம் மதுவை அடியோடு ஒழிக்கும் புரட்சியையும் நிகழ்த்திக் காட்ட முடியும். இதிலே, உலக நாடுகளுக்கு நாம் வழிகாட்டியாக இருப்போமே! மதுவை ஒழிப்பதற்கு நாம் கடைப்பிடிக்கும் நடைமுறையில் மாறுதல் காண வேண்டும்.

முதலில் இதனை சமூக சீர்திருத்தப் பணிகளில் ஒன்றாகக் கருதும் கண்ணோட்டம் நமக்கு வேண்டும். அப்படிப் பார்த்தால் இந்தியா முழுவதிலுமே மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டு வந்தாக வேண்டும். இந்தியா—ஒன்று, குடிகார நாடாக இருக்க வேண்டும்; இல்லையேல், குடியை அடியோடு ஒழித்துவிட்ட நாடாக இருக்க வேண்டும்.

இரண்டு மாநிலங்களிலே பூரண மதுவிலக்குச் சட்டம் அமுலில் இருக்கிறது. வேறு சில மாநிலங்களிலே சில பகுதிகளில் மட்டும் மதுவிலக்குச் சட்டம் அமல் நடத்தப்படுகிறது. இன்னும் சில மாநிலங்களிலே மதுவிலக்குச் சட்டமே அமுலில் இல்லை. தமிழ்நாட்டிலுள்ள திண்டிவனத்தைத் தாண்டி பாண்டிச்சேரிகுள் புகுந்தால், குடிப்பது சட்ட சம்மதம்! பாண்டிச்சேரியைவிட்டு, தமிழ்நாட்டின் எல்லையில் கால் வைத்தால், குடிப்பது சட்ட விரோதம்! இந்த லட்சணத்திலே, இந்தியாவை 'காந்திய நாடு' என்று சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்கிறோம். குடிப் பழக்கம் பஞ்சமா பாதகங்களுள் ஒன்று என்று சொல்லும் இந்து தருமம் தழைக்கும் நாடு என்று பௌராணிகர்கள் பெருமை பேசுகின்றனர்.

மதுவை ஒழிப்பது அரசியல் சட்டப்படி மாநிலங்களின் உரிமைதான் என்றாலும், இதிலே மத்திய அரசும் பொறுப்பேற்க வேண்டும். அனைத்து இந்தியாவிலும் ஏக காலத்தில் மதுவிலக்குச் சட்டத்தை அமுலுககுக் கொண்டு வர வேண்டும். இதனால், மாநிலங்களுக்கு ஏற்படும் பொருள் இழப்பை ஓரளவிலேனும் மத்திய அரசு ஈடு செய்ய வேண்டும்.

இந்தத் தலைமுறையில் குடிப் பழக்கத்தை அடியோடு ஒழிப்பதில் கஷ்டம் இருக்கலாம். குடித்துப் பழகி விட்டவர்கள் இன்னும் நம்மிடையில் வாழ்கின்றனர். தமிழ் நாட்டில் பூரண மதுவிலக்குச் சட்டம் நடைமுறைக்கு வந்து கால் நூற்றாண்டு ஆகிறது. இந்தக் காலத்திலே பழங்குடியர்கள் மறைந்து வந்தனர். ஆம், குடியர்களின் எண்ணிகமை குறைந்து வந்தது. ஆனால், திடீரென்று மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்து, குடிப்பது சட்ட சம்மதமாக்கப் பட்டது. இரண்டாண்டுக் காலம மதுவரக்கன் புது வாழ்வு பெற்றான். அந்தக் காலத்திலே மதுவை மறந்திருந்த பழங்குடியர்கள் திரும்பவும் அந்தக் கொடிய வழக்கத்தைப் புதுப்பிதது‌க் கொண்டனர். புதுக்குடியர்களும் தோன்றினர். ஐயோ! இளைஞர்களில் —

குறிப்பாக, கல்வி பயிலும் மாணவர்களில் பலரும் குடிப் பழக்கத்தை மேற் கொண்டனர் என்று மதுவிலக்குக் கமிஷன் தகவல் தந்திருக்கிறது! மதுவிலக்குச் சட்டத்தை இரண்டாண்டுக் காலத்திற்கு ஒத்தி வைத்தவர்களே, அதில் காலூன்றி நிற்க முடியாமல், திரும்பவும் பூரண மதுவிலக்குச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தனர். கொண்டு வந்தும் பயன் என்ன? இரண்டாண்டுக் காலத்திலே புதிதாகக் குடிக்கப் பழகியவர்கள் அதிலிருந்து மீளவில்லை. மதுப் பழக்கத்தைப் பூரணமாக ஒழிக்கும் முயற்சிக்கு நாளையே வெற்றி கிடைத்து விடும் என்று நான் நம்பவில்லை. நம்புவது என்னை நானே ஏமாற்றிக் கொள்வதாகும். நீங்களும் நம்ப வேண்டுமென்று எதிர்பார்ப்பேனேயானால், உங்களையும் நான் ஏமாற்றுவதாகவே இருக்கும். இன்னும் ஒரு நூற்றாண்டு காலத்திற்குக் கூட மதுவரக்கனை எதிர்த்து நாம் போராட வேண்டியிருக்கலாம். இந்த நினைப்போடு மதுப் பழக்கத்தை ஒழிப்பதற்காக வேலைத் திட்டம் வகுக்கப்பட வேண்டும். இந்தியா முழுவதிலும் மதுவிலக்கு நாள் கொண்டாடப்பட வேண்டும். முதலில் ஆண்டுக்கொரு நாள் என்றும், பின்னர், ஆறு மாதத்திற்கு ஒரு நாள் என்றும், அதன் பின்னர் மாதத்திற்கொருநாள் என்றும், அதற்கப்புறம் வாரத்திற்கு ஒரு நாள் என்றும் நாடு முழுவதிலும் மதுவிலக்கு நாள் கொண்டாடப்பட வேண்டும். அந்நாளில் மதுவிலக்கு அமுலிலில்லாத பிரதேசங்களில் மதுக் கடைகளை மூடச்செய்ய வேண்டும். நாளைக்கே நாடு முழுவதிலும் மதுவிலக்குச் சட்டம் அமுலுக்கு வருவதானாலும் அதற்கப்புறமும் கள்ளச் சாராய அரக்கனோடு நாம் தொடர்ந்து போராட வேண்டியிருக்கும். அதற்காகத்தான் மதுவிலக்கு நாள் கொண்டாடப்பட வேண்டும் என்கிறேன்.

அந்த நாளிலே மாநில-மத்திய அரசுகளிடமுள்ள பிரசார சாதனங்கள் அனைத்தும் பயன்படுத்தப்பட வேண்டும். மதுவின் கொடுமைகளை விளக்கும் பிரசார திரைப்படம் ஒன்றைத் தயாரித்து, நாடு முழுவதிலுமுள்ள திரைப்பட அரங்குகளிலே

மதுவிலக்கு நாளில் திரையிட வேண்டும். அன்று மது விலக்குப் பிரசார நாடகங்கள் நகரங்களிலும் கிராமங்களிலும் நடத்தப்பட வேண்டும்.

வருங்காலத் தலைமுறையினரேனும் குடிப்பழக்கம் என்னும் கொடுமைக்கு இரையாகாமல் இருக்க பள்ளிகளுக்கான பாடப் புத்தகங்களிலே குடிப்பழக்கத்தின் கொடுமையை விளக்கும் பாடங்கள் சேர்க்கப்பட வேண்டும். கல்லூரி மாணவர்களை மதுவிலக்குப் பிரசாரத்தில் ஈடுபடுத்த வேண்டும்.

கனவான்களுக்கும், தனவான்களுக்கும் மது அருந்த 'பெர்மிட்' வழங்கும் முறை அடியோடு கைவிடப்பட வேண்டும். "பூரண மதுவிலக்கு" என்னும் பெயரில் சட்டத்தை அமுலில் வைத்து விட்டு, கனவான்களுக்கும் தனவான்களுக்கும் பெர்மிட் வழங்குவது அந்தச் சட்டத்தையே அவமதிப்பதாகும். பெர்மிட்டின் பேரில் கனவான்களும் உயர் அதிகாரிகளும் குடிக்கலாம் என்றால், அப்புறம் ஏழை எளியவர்களை மட்டும் தண்டனைக்கு உட்படுத்துவானேன்? மதுவிலக்குச் சட்டத்திலிருந்து ஒரு குடிமகன் கூட விலக்குப்பெற அனுமதிக்கக் கூடாது.

தமிழக முதல்வர் மாண்புமிகு எம்ஜிஆரும், ஆளுநர் மேதகு பிரபுதாஸ் பட்வாரியும் மதுப்பழக்கத்தை அடியோடு ஒழிக்க முயல்கிறார்கள். அதிலே அவர்கள் வெற்றி பெறக் கைகொடுங்கள் என்று இரு கைகளாலும் இரந்து வேண்டுகிறேன்

# முடிவுரை

நாட்டிலிருந்து குடிப்பழக்கத்தை சட்டத்தின் மூலம் அடியோடு ஒழிக்க முடியாவிட்டாலும், பெருமளவுக்கு அந்தக் கொடுமையைக் குறைத்துவிட முடியும் என்பதைச் சிந்தனை சக்தியுள்ளவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் இதில் இரண்டு விதக் கருத்துக்கள் இருக்கமுடியாது

குடிப்பது குறையோ, குற்றமோ அல்ல என்று கூறுவோர் யாரேனும் உண்டா? அப்படிச் சொல்ல இதுவரை யாருக்கும் துணிவு பிறக்கவில்லை குடிப்பவனை பகிஷ்காரம் செய்யும் பழக்கம் இன்னமும் பாரத சமுதாயத்தில் இருக்கிறது. பத்து பேர் அமர்ந்துள்ள பொது அவையிலே ஒருவன் மீதிருந்து மது நாற்றம் வீசுமானால், மற்றவர்கள் அவனை அருவெறுப்போடு பார்ப்பது வழக்கம். தன் பெண்ணுக்கு வரனைத் தேடும் தாயோ தந்தையோ, கிடைத்த வரன் குடிப்பழக்கமுடையவன் என்று கேள்விப்படுவார்களானால், அதைப்பற்றிக் கவலைப்படாமல் அவனுக்குப் பெண் கொடுக்க முன் வருவார்களா? தான் குடிகாரனாக இருந்தாலும், பிறன் குடிப்பதை வெறுக்கும் நல்ல சுபாவத்தைத்தான் ஒவ்வொரு குடிகாரனும் பெற்றிருக்கிறான்.

இப்படி, குடிப்பழக்கமுடையவன் பலர் கூடிய அவையில் இருப்பதை விரும்பாததும், குடிப்பழக்கமுள்ளவனுக்குப் பெண் கொடுக்க மறுப்பதும் ஒருவகையான சமூக பகிஷ்காரம் அல்லவா? இத்தகைய பகிஷ்காரத்தை நீண்ட நெடுங்காலமாகப் பழக்கத்தில் கொண்டுள்ள இந்திய சமுதாயத்திலே இந்தக் கொடிய குடிப்பழக்கத்தை சட்டத்தின் மூலம் ஒழிப்பதற்கு மட்டும் எதிர்ப்பு காட்டுவானேன்? குடிப்பது சமூக

பகிஷ்காரத்திற்குரிய குற்றமாகுமென்றால், அந்தக் குற்றத்தைச் செய்வதற்கு அரசே தூண்டுதலாக இருந்து, போதைப் பொருள்களை விற்பனை செய்யும் கடைகளுக்கு லைசென்ஸ் கொடுத்து, அதன் மூலம் ஆண்டுதோறும் பலகோடி ரூபாய்களை வருமானமாகப் பெறுவது மக்கள் மன்னிக்க முடியாத—மன்னிக்கவும் கூடாத—மாபெரும் குற்றம் அல்லவா? மக்களைக் குடிக்க வைத்து, அதற்குச் சட்ட சப்பந்தமான முத்திரைபோட்டு, இந்தப் பாவத்திலிருந்து பொருள் தேடும் அரசு மக்கள் அரசாக இருக்க முடியுமா?

மக்களை குடிக்கவும் அனுமதித்துவிட்டு, அந்தக் குடிப் பழக்கத்தால் ஒருவன் நிதானமிழந்து தவறிழைப்பானானால், அதைக் குற்றமாகக் கருதி, அவனை நீதி மன்றத்தில் நிறுத்தி வைத்து அரசு தண்டிக்கிறதே, அது நீதியாகுமா? அறிவை அழித்து, கீழ்த்தரமான உணர்ச்சிகளுக்கு மனிதனை அடிமையாக்கும் குடிப்பழக்கத்தை சட்ட சம்மதமான ஒன்றாக அனுமதித்து விட்டு, அதன் தீய விளைவுகளை மட்டும் சட்ட விரோதம் என்று கூறி, குடிகாரனைத் தண்டிப்பானேன்? இது அரசு கடைப்பிடிக்கும் முரண்பட்ட போக்கு ஆகாதா?

நாட்டிலே இப்பொழுது பணப்புழக்கம் அதிகரித்திருக்கிறது. இந்த நிலையிலே குடிப்பழக்கத்தை சட்ட சம்மதமாக்கும் கொள்கை ஆட்சேபனையின்றி அங்கீகரிக்கப்பட்டு விடுமானால், நாடு முன்னேற முடியாது.

தமிழகம் குடிப்பழக்கத்திலிருந்து மீள வேண்டுமானால், முதலில இங்குள்ள க்கட்சிகள் மதுவிலக்கில் உண்மையான—உறுதியான—நாட்டம் சொள்ள வேண்டும். அரசியல் கட்சிகள் மது விலக்கில் தெளிவான சொள்கையையோ, தடமான நடைமுறையையோ கொண்டிருககவிலலை. மதுவிலககுப் பிரச்னையில் ஏற்பட்டுள்ள குழப்பத்திற்கெல்லாம் இந்தப் போக்கே காரணமாகும்.

தி மு. கழகம் 1957 தொடங்கி 1966 வரை தமிழக சட்ட மன்றத்திலே வலிமை மிக்க எதிர்க்கட்சியாக இருந்து வந்தது. அப்போது, மதுவிலக்குக் கொள்கையை அது எதிர்த்ததாகத் தெரியவில்லையென்றாலும், மதுவிலக்குக்கு ஆதரவான போக்கை அது உறுதியாகக் கடைப்பிடித்தது என்றும் சொல்லமுடியாது. கோரப்படுமானால், அதற்கான சான்றுகளைக் காட்டவும் முடியும்.

1967ல் தி மு க ஆளுங்கட்சியாக வந்த பிறகு முதல்வர் பொறுப்பை ஏற்ற அண்ணா அவர்களால் மதுவிலக்குக் கொள்கை உறுதியாக ஆதரிக்கப் பட்டது. சட்டத்தின் மூலம்தான் குடிப்பழக்கத்தை ஒழிக்க முடியும் என்ற கொள்கையை அண்ணா அவர்கள் ஐயத்திற்கிடமின்றி அறிவித்திருந்தார். "அரசு எவ்வளவு வருமானத்தை இழப்பதாயினும், தமிழகத்தில் மதுவிலக்குச் சட்டம் அமுலில் இருந்தே தீரும்" என்று அண்ணா சட்டமன்றப் பேரவையிலேயே பிரகடனம் செய்தார். துரதிர்ஷ்டவசமாக, அண்ணா அவர்களின் மறைவுக்குப் பின்னர், பூரண மதுவிலக்குக் கொள்கையில் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் இயங்கிய தி மு க அரசு உறுதி காட்டவில்லை. மதுவிலக்கால் ஏற்படும் இழப்புக்கு மத்திய அரசு ஈட்டுத் தொகை தரவேண்டும் என்ற கோரிக்கையை முதல்வர் மு கருணாநிதி அவர்கள் எழுப்பினார். "இந்தக் கோரிக்கையை மத்திய அரசு ஏற்காவிடில், மதுவிலக்குச் சட்ட அமுல் ஒத்திப் போடப்படும்" என்றும் அறிவிப்பு கொடுத்தார்.

அதன்படி, 1971 அக்டோபரில் மதுவிலக்குச் சட்டம் அமுலை நிறுத்தி வைக்கும் சட்டம் ஒன்றை சட்டமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றி வைத்தார். இதன்படி மதுக் கடைகள் திறக்கப்பட்டன. விளம்பரம செய்வதில் திறமையுள்ள பொதுஜன ஊழியர்கள் மதுக்கடைகளை ஏலம் எடுத்த நிகழ்ச்சியும் தமிழகத்தில் நடந்தது. கள்ளு, சாராயக் கடைகள்

இருக்கும் இடத்தை விளம்பரப்படுத்துவதிலே தனித்திறமை காட்டப்பட்டது. பூரண மதுவிலக்கு நடைமுறைக்கு வருவதற்கு முன்பு கள்ளு, சாராயக் கடைகளை நடத்தியவர்கள் இவ்வளவு திறமையுடன் மதுக் கடைகள் இருக்கும் இடத்தை விளம்பரப் படுத்தவில்லை. இந்த விளம்பரத் திறமையிலே அரசியல் வாடை வீசியது என்றும் சொல்வேன். இதனால், புதிய குடியர்கள் தோன்றினார்கள். அரசுக்கு எதிர்பார்த்ததை விடவும் ஆண்டுதோறும் சுமார் 70 கோடி ரூபாய் அளவில் வருவாய் குவிந்தது.

இவ்வளவிருந்தும், இரண்டாண்டுகளுக்குப் பின் திரும்பவும் கள்ளு, சாராயக் கடைகளை மூடி பூரண மதுவிலக்குத் சட்டத்தை அமுல் படுத்தியது தி மு க அரசு. ஏன் இந்தத் தடுமாற்றம்? சுமார் 20 ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த கள்ளு, சாராயக் கடைகளைத் திறப்பது நல்லதா? கள்ளு, சாராயக் கடைகளை கண்ணாலும் பார்க்காதிருந்த புதிய தலைமுறையினர் மீது சட்டத்தின் மூலம் மதுவைத் திணித்தது மாபெரும் குற்றமல்லவா? இவ்வளவு பெரிய குற்றத்தைச் செய்த தி. மு. க. அரசு திடீரென மதுக் கடைகளைத் திறந்தது எதற்காக?

இரண்டாண்டுக் காலம் மதுக்கடைகள் திறந்திருந்தபோது புதுக் குடியர்கள் பெருகினார்கள். மாணவர்களிடையேயும் குடிப் பழக்கம் ஏற்பட்டது. மாணவர்கள் நடத்திய கிளர்ச்சி காரணமாக கல்லூரிகளிலுள்ள மாணவர்கள் விடுதிகள் போலீசாரால் சோதனையிடப்பட்டபோது பல விடுதிகளில் மதுப்புட்டிகள் கண்டெடுக்கப் பட்டனவாம்! அந்த அளவுக்குக் குடிப் பழக்கம் வருங்காலத் தலைமுறையையும ஊடுருவி விட்டது இரண்டாண்டுகளிலே! இதுபற்றியெல்லாம் தகவல் கிடைத்ததனால், இரண்டாண்டுகளுக்கு முன் தான் செய்த தவறை உணர்ந்து, மனமாற்றமடைந்து திரும்பவும் மதுவிலக்குச் சட்டத்தை பழையபடியே அமுல்நடத்துகைய மாறுதலா

மின்றி அமல் நடத்த முன் வந்தார், அப்போதைய முதல்வர் கலைஞர் கருணாநிதி. ஆம்; பழிக்குப் பயந்து!

போகட்டும். இனியேனும் தமிழகத்தில் மதுவிலக்குக்கு வெற்றி தேட இங்குள்ள பிரதான எதிர்க்கட்சியான தி. மு. கழகம் ஆளுங்கட்சியான அ. இ. அ தி. மு. க. வுடன் ஒத்துழைக்க வேண்டும். இது எனது வேண்டுகோள்.

மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் இதய சுத்தியோடு மதுவிலக்குக்கு வெற்றி தேட முயன்று வருகிறார். ஏழை எளியவர்களின் நலன் ஒன்றையே கருதி இப்பணியை அவர் துணிவுடன் மேற்கொண்டிருக்கிறார் இதில் எனக்கு ஐய மில்லை மதுவிலக்கு விஷயத்திலே அவர் மகாத்மாவின் போதனையைச் சாதனையாக்க முயன்று வருகிறார். மறையும்போது ராஜாஜிக்கு இருந்த மனக்குறை தமிழகத்தில் மதுவிலக்கு கைவிடப்பட்டு விட்டதே என்பதுதான். அந்த ஆன்மாவின் வேதனையைப் போக்க மாண்புமிகு எம். ஜி. ஆர். பாடுபட்டு வருகிறார். அறிஞர் அண்ணா பூரண மதுவிலக்கில் கொண்டிருந்த உறுதியை எதிரொலிக்கும் வகையில் தமிழக முதல்வர் செயல் புரிந்து வருகிறார். அவருக்கு வெற்றி உண்டாவதாக!

பூங்கொடி பதிப்பகம்

மயிலாப்பூர் : : சென்னை-600 004,

wrppper printed by :
prabhu printing house, madras-600 017.